பக்கங்கள்:11 | விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 பங்குனி 07 திங்கட்கிழமை 21.03.2022 கதிர் 136

**இனி இது ரகசியம் அல்ல!**

தமிழர்களும் சம்பந்தப்பட்ட இரண்டு கூட்டங்கள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் இவ்வாரம் கொழும்பில் நடைபெறவிருக்கின்றன.

ஒன்று சர்வதேச மாநாடு. நாளை மறுதினம் புதனன்று ஜனாதிபதி மாளிகையில் ☞2

# கோட்டாவுடன் பேச்சு; ரெலோ பங்குபற்றாது!

## இனப்பிரச்சினை இருப்பதை ஒப்புக்கொண்டு அவர் சாதகமான சமிக்ஞை தர வேண்டுமாம்



மட்டக்களப்பு, மார்ச் 21

ஜனாதிபதியிடம் இருந்து சாதகமான சமிக்ஞை கிடைக்காத வரையில் பேச்சுகளில் கலந்து கொள்ளப் போவதில்லை என ரெலோ தெரிவித்துள்ளது. ஜனாதிபதி முதலில் இந்த நாட்டில் ஒரு இனப்பிரச்சினை இருக்கின்றது என்பதை ஒப்புக்கொண்டு வெளிப்படையாக கூறினால் மாத்திரமே பேசுக்குச் செல்வோம் என அவர் கூறினார்.

கட்சியின் மட்டக்களப்பு அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அதன் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் இதனைத் தெரிவித்தார். ☞2

## பால் தேநீர் இனி ரூ.100/=

பெல்வத்த பால் மா நிறுவனம் 400கிராம்பால்மாபக்கெட்டொன்றின் விலையை 105 ரூபாவால் அதிகரித் துள்ளது. இனி 400 கிராம் பெல்வத்த பால் மா பக்கெட்டொன்றின் புதிய விலை 625 ரூபாவாகும்.

இதேவேளை, ☞9

## லாஃப் எரிவாயு சிலிண்டர் 4,199 ரூபாவாக அதிகரிப்பு




லாஃப் சமையல் எரிவாயு சிலிண் டர்களின் விலை அதிகரிக்கப்பட் டுள்ளது.

அதன்படி, 12.5 கிலோ கிராம் லாஃப் சமையல் எரிவாயு ☞9

## ஆலோசனைகளை மதிக்காதவர் பஸில்

### போட்டுத் தாக்குகிறார் முருத்தெட்டுவ தேரர்

கொழும்பு,மார்ச்21

மகா சங்கத்தினரது ஆலோசனைக்கு புறம்பாக அரசாங்கம் செயற்படுமாயின் இனிவரும் காலங்களில் அரசாங்கம் மகா சங்கத்தினரது ஒத்துழைப்பை பெற முடியாது என வண.முருத் தெட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்துள்ளார்.

சிறந்த ஆலோசனைகளுக்கு நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ மதிப்பளிப்பதில்லை. ஆகவே அவர் தொடர்பில் கருத்துரைக்க ☞9

## சர்வகட்சி மாநாட்டைப் புறக்கணிக்க தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி முடிவு

கொழும்பு, மார்ச் 21

வரும் புதன்கிழமை ஜனாதிபதி கூட்டியுள்ள சர்வ கட்சி மாநாட்டில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பங்குபற்ற மாட்டாது.

கட்சியின் தலைவரும், யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இத்தகவலை காலைக்கதிருக்குத் தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதார நெருக்கடி குறித்து ஆராய்வதற்காக சர்வ கட்சி மாநாடு ஒன்றை ஜனாதிபதி கூட்டி இருக்கின்றார். அது தொடர்பான அழைப்பு உங்களுக்கு கிடைத்திருக்கின்றதா என்று கேட்கப்பட்டபோது- சர்வகட்சி மாநாட்டுக்கு எங்களுக்கு அழைப்பு கிடைத்துள்ளது. ஆனால் நாங்கள் அதில் பங்கு பற்ற மாட்டோம் என்றார்.

(விரிவான செய்தி 05ஆம் பக்கத்தில்...)

## ஆளும் கூட்டமைப்பு எம்.பிக்கள் வீதிக்கு இறங்க முடியாத நிலை!

### அவர்கள் தரப்பில் விசனம் தெரிவிப்பு

இலங்கையில் தற்போது அத்தியாவசிய பொருள்களுக்குத்தட்டுப்பாடுஏற்பட்டுள்ளதனால் தாம் வீதியில் செல்ல முடியாதநிலைஏற்பட்டுள்ளதாக ஆளும் பொதுஜன பெரமுனவின் பின்வரிசைநாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே மக்கள் எதிர்நோக்கும் இந்தப் பிரச்சினைகளுக்கு அரசாங்கம் விரைந்து ☞9

## ரூ12 கோடி தங்கத்தை யாழ் வழியாக இந்தியாவுக்கு கடத்த முயன்றனராம்!

### கொழும்பு ஆர்மர் வீதியில் ஒருவர் சிக்கினார்

இலங்கையில் இருந்து கடல் மார்க்கமாக இந்தியாவிற்கு 12 கோடி ரூபாவிற்கும் அதிகமான பெறுமதியுடைய தங்கத்தை கடத்தி செல்ல முற்பட்ட நபரொருவரை கொழும்பு ஆர்மர் வீதி பகுதியில் வைத்து பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்டசுற்றிவளைப்பில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டார் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார். ☞9

## இழந்த உயிர்களைத் தவிர ஏனையவற்றை வடக்கு மக்களுக்கு பெற்றுக்கொடுத்தோம்

### யாழ்ப்பாணத்தில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பெருமிதம்

2019 இல் யுத்தம் முடிவிற்கு வந்த பின்னர் வடக்கு மக்களுக்கு இழந்த உயிர்களை தவிர அனைத்தையும் பெற்றுக்கொடுத்தோம் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், மட்டுவிலில் நிர்மாணிக்கப்பட்ட யாழ்ப்பாணம் விசேட பொருளாதார மத்தியநிலையத்தை நேற்றுத் திறந்து வைத்தபின்னர் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் ஆற்றிய உரை வருமாறு:-

யாழ்ப்பாணத்தின் ☞2



## மூளாயில் நேற்றிரவு விபத்து காரைநகர்வாசி உயிரிழப்பு

### மற்றோர் இளைஞர் படுகாயம்

மூளாயில் நேற்று இரவு 9.00 மணியளவில் இரு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானமையில் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். மற்றொருவர் படுகாயமடைந்தார்.

இவ்விபத்தில் உயிரிழந்தவர் யாழ்ப்பாணம் நியூ கமால் மாபிள் ☞2



## முள்ளிவாய்க்காலில் வீதியை விட்டு விலகி கவிழ்ந்தது பஸ்; பயணிகள் பலர் படுகாயம்





(சண்முகம் தவசீலன்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் முல்லைத்தீவு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முள்ளிவாய்க்கால் பகுதியில் தனியார் பஸ் ஒன்று வீதியை விட்டு விலகி கவிழ்ந்தில் ☞9

## இரட்டைக் குழந்தைகளில் ஒன்று தண்ணீர் கானுக்குள் வீழ்ந்து பலி

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பில் தண்ணீர் கானுக்குள் தவறி வீழ்ந்த இரட்டை குழந்தைகளில்ஒன்றுஉயிரிழந்தமை அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

மலசல கூடத்திற்காக வைக்கப்பட்ட தண்ணீர் கானில் தவறி வீழ்ந்தே இக்குழந்தை உயிரிழந்துள்ளது.

புதுக்குடியிருப்பு கைவேலிப் பகுதியினை சேர்ந்த சியோன்ன் என்ற ஒருவருடமும் மூன்று மாதமுமான குழந்தையே நேற்று முன்தினம் இவ்வாறு உயிரிழந்துள்ளது. ☞2

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நடைபெறுகின்றது.

மற்றது – தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் வெள்ளியன்று நடைபெறும் கூட்டம். அது ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெறுகின்றது.

சர்வகட்சி மாநாடு இன்றைய நிலையில் பிசுபிசுத்துப் போகும் என்றுதான் தோன்றுகின்றது. ஏற்கனவே ஜே.வி.பி. மற்றும் விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில, வாசுதேவ நாணயக்கார ஆகியோரின் கட்சிகள் அதனைப் பகிஷ்கரிக்கத் தீர்மானித்து விட்டன.

தமிழர் தரப்பில் தமிழ் தேசிய மக்கள் முன்னணி இந்த மாநாட்டில் பங்குபற்றாது என்பதை அதன் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அறிவித்து விட்டார்.

தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன் இவ் விடயத்தில் தனித்து முடிவெடுக்க விரும்பவில்லை எனத் தெரிகின்றது. ஏனைய தமிழ்க் கட்சிகளின் தீர்மானத்தையும், தமது கூட்டணியின் பங்காளிக் கட்சிகளின் கருத்தையும் உள்ளெடுத்து ஒரு முடிவுக்கு வர அவர் எத்தனிக்கின்றார். பெரும்பாலும் அதுவும் பகிஷ்கரிப்பாகத் தான் அமையும். அந்த சர்வகட்சி மாநாட்டில் பங்குபற்றுவதன் மூலம் சாத்தியமான முன்னேற்றம் ஏதும் கிட்டும் என அவர் நம்பவில்லை.

தமிழரசு சார்பில் சம்பந்தன் – சுமந்திரன் பங்கு பற்றுகின்றனர். புளொட் சார்பில் பெரும்பாலும் சித்தார்த்தன் பங்கு பற்றுவார் என நம்பப்படுகின்றது.

ரெலோவைப்பொறுத்தவரை குழப்பம் நீடிப்பதாகவே தெரிகின்றது. நேற்று முன்தினம் மட்டக்களப்பில் கூடிய ரெலோவின் தலைமைக்குழு, சர்வகட்சி மாநாடு குறித்து இரண்டுங்கெட்டான் முடிவு எடுத்திருந்தது. சிலர் மாநாட்டுக்குப் போகலாம் என்றனர். சிலர் வேண்டாம் என்றனர்.

இந்தப் பின்புலத்தில் ரெலோவின் அரசியல் குழு இன்று முன்னிரவில் 'சூம்' முறையில் கூடுகின்றது. அந்தக் கூட்டத்தில் முடிவு எடுக்கப்படும்.

இந்த சர்வ கட்சி மாநாட்டில் பங்குபற்றுவதா இல்லையா என்பது குறித்து பிரதான எதிரணியான ஐக்கிய மக்கள் சக்தி இன்னும் தீர்மானிக்கவில்லை. சர்வ கட்சி மாநாட்டில் பங்குபற்றுவதில் அர்த்தமில்லை என அபிப்பிராயமே கட்சி மட்டத்தில் பரவலாக நிலவுகின்றமையை அறிய முடிந்தது.

சர்வ கட்சி கூட்டத்தில் பங்குபற்றுவதில்லை என்று ஜே.வி.பி. போன்று சஜித் பிரேமதாஸா தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியும் தீர்மானிக்குமானால், சர்வ கட்சிக் கூட்டம் என்பதே தளர்ந்து, பொலபொலத்துப் போய் விடும்.

அடுத்தது – தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் ஜனாதிபதி கோட்டாபய நடத்தும் பேச்சு வெள்ளியன்று காலை 10.30 மணிக்கு நடைபெறுகின்றது.

இந்தக் கூட்டத்தில் ரெலோ பங்குபற்றுவதில்லை என்பது பெரும்பாலும் தீர்மானமாகி விட்டது.

ரெலோவின் மூன்று எம்.பிக்களும் குறைந்தால் சம்பந்தனின் பதினொரு பேர் ரீம், எட்டாகக் குறைந்து விடும்.

எனக்கென்னவோ ஜனாதிபதி தரப்புடனான கூட்டத்தில் பங்குபற்றுவதா, இல்லையா என்ற ஒரு சிறிய சர்ச்சையுடன் முடியும் விவகாரமாக இது தெரியவில்லை.

கூட்டமைப்பின் கட்டமைப்பு மாற்றத்திற்குக் கால்கோள் இடும் நகர்வாகத் தான் ரெலோ – தமிழரசு முரண்பட்ட நிலைப்பாடு தோன்றுகின்றது.

உடனடியாக நாடாளுமன்றத் தேர்தல்கள் இல்லை என்ற துணிச்சலில் தலைவர்கள் இந்த முரண்பட்ட நிலைப்பாட்டை முன் நகர்த்துகின்றனர்.

நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ திட்டமிட்டிருக்கும் அதிரடி உள்ளூராட்சித் தேர்தல் ஜூனில் திடுதிப்பென வருமானால், இரண்டு கட்சிகளுமே இழப்புகளைச் சந்திக்க நேரும் என்பது துலாம்பரமானது.

இன்றைய நிலையில் ரெலோ – தமிழரசு உறவு என்பது சுட்டமண் போன்றது. இரண்டையும் இணைத்து வைத்துக் காத்திரமான எதையும் முன்னெடுப்பது சாத்தியப்படாதுஎன்றேஎண்ணுகின்றேன்.

இரண்டுமே தனி வழி போவதற்கான முன்னாயத்தங்கள்தாம் இவை.

ரெலோவின் இந்தத் துணிச்சலின் விளைவு – பெறுபேறு – விரைவில் வெளிப்படும். அப்போது பார்ப்போம்.

– மின்னல் –

## இழந்த உயிர்களைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மூன்று யுகங்களை நான் கண்டிருக்கிறேன். 1970களில் யாழ்ப்பாணம் எப்படி இருந்தது என்பது எனக்கு நினைவிருக்கிறது. அப்போது யாழ் மக்களுக்கும் கொழும்பு மக்களுக்கும் இடையே சிறந்த தொடர்பு இருந்தது. யாழ்ப்பாணத்தில் சிங்கள முதலாளிமார் இருந்தார்கள். இங்கிருந்த பெரும்பாலான தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அப்போது கொழும்பில் இருந்தனர்.

இன்றும் அப்படித்தான். யாழ்ப்பாணத்திலிருந்து ரயிலிலே கொழும்பு வந்துசென்றனர். கொழும்பில் பணிபுரியும் அரச ஊழியர்கள் வெள்ளிக்கிழமை மாலை ரயிலில் ஏறி காலையில் யாழ்ப்பாணத்தை சென்றடைவர். அது ஒரு காலம். அந்தக் காலத்தில் யாழ்ப்பாணம் எங்களுக்கு வெகு தொலைவில் இல்லை. மிக நெருக்கமாக உணர்ந்தோம்.

அந்த சகாப்தம் 1980க்குப் பின்னர் திடீரென மறைந்தது. யாழ்ப்பாணம் செல்லும் ரயில் பாதையை உடைத்தனர். தெற்கிலிருந்து வடக்கு நோக்கியும் வடக்கிலிருந்து தெற்கு நோக்கியும் செல்ல வேண்டிய யாழ்தேவி நின்றது. வடக்கையும் தெற்கையும் இணைக்கும் பண்பாட்டுப் பாலமாக யாழ்தேவியைப் பார்க்கிறேன். வடக்கு மக்கள் சுதந்திரத்தை இழக்க ஆரம்பித்தனர். வடக்கில் விவசாயி நெல் வயலுக்குச் செல்ல முடியவில்லை. மீனவர்கள் கடலுக்கு செல்ல முடியவில்லை. வடக்கு பதுங்கு குழியாக மாறியது. சொந்த மண்ணில் சுதந்திரமாக வாழும் உரிமையை இழந்தனர். எந்த நேரத்திலும் தமது சொந்த வீடுகளைவிட்டு வெளியேற வேண்டிய சூழ்நிலை உருவானது.

வடக்கில் உள்ள மக்கள் அகதிகளாக பல்வேறு இடங்களுக்கு செல்ல வேண்டியிருந்தது. ஆரம்ப காலத்தில் இந்தியாவிற்கும் சென்றனர். ஐரோப்பிய நாடுகளுக்கும் சென்றனர். அவர்களுக்கு தாயகம் இருந்தாலும் அங்கு சுதந்திரமாக வாழமுடியாமல், தெரியாத பிரதேசங்களிலும், நாடுகளிலும் அகதிகளாக வாழ வேண்டியதாயிற்று. 30 ஆண்டுகளாக அந்த இருண்ட சகாப்தம் இருந்தது. அந்த இருண்ட காலத்தில் வடக்கு மக்களின் வாழ்வுரிமையும் அபிவிருத்தியும் பறிக்கப்பட்டன.

மே 19, 2019 அன்று அந்த இருண்ட சகாப்தத்தை முடிவுக்குக் கொண்டுவர முடிந்தது. அதன் பின்னர் வடக்கு மக்கள் இழந்த உயிர்களை தவிர அனைத்தையும் வழங்க நடவடிக்கை எடுத்தோம். யுத்தம் முடிவடையும் போது இன்று வடக்கில் உள்ள எதையும் அன்று காணமுடியவில்லை. குண்டு வீச்சுகளால் வீழ்த்தப்பட்ட கட்டடங்கள், உடைந்த சாலைகள், வீடற்ற மக்கள். ஆனால் ஓரிரு வருடங்களில் அனைத்தையும் திருப்பிக் கொடுத்தோம். சாலைகள் அமைக்கப்பட்டன. தண்ணீர் வழங்கப்பட்டது. நூறாயிரக் கணக்கான கண்ணிவெடிகள் அகற்றப்பட்டன. மின்னல் வேகத்தில் மின்சாரம் கொடுக்கப்பட்டது என்று சொல்வதே சரியாக இருக்கும். பாடசாலைகள், மருத்துவமனைகள் இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளில் கட்டப்பட்டன.

அன்று வடக்கு மக்கள் சாப்பிடுவதற்கும், பல் துலக்குவதற்கும் மட்டுமே வாய் திறக்கிறார்கள் என்ற கதை காணப்பட்டது. அந்த மக்களை நாம் விடுவித்தோம். பல ஆண்டுகள் கழித்து ரயில் பாதை அமைக்கப்பட்டது. வடக்கும் தெற்கும் யாழ்தேவியால் இணைக்கப்பட்டன. வடக்கில் மாகாண சபை மீண்டும் ஸ்தாபிக்கப்பட்டது.

ஆனால் அந்த சகாப்தத்திற்கு 2015 இல் இடையூறு ஏற்பட்டது. நாங்கள் செய்த வேலைகள் 2015இன் பின்னர் இடைநிறுத்தப்பட்டன. நல்லிணக்கம் என்ற திட்டம் வந்தது. அவசரகாலச் சட்டங்களை நீக்கி நாம் ஏற்படுத்திய மாகாண சபை நல்லாட்சியுடன் கலைக்கப்பட்டது. நல்லாட்சி காலத்தில் ஒரு வீதி அபிவிருத்தியோ அல்லது மின்சாரத் திட்டமோ யாழ்ப்பாணத்திற்கு கிடைக்கவில்லை. நாட்டிற்கும் கிடைக்கவில்லை. புதிய மின் உற்பத்தி நிலையம் அமைக்கப்பட்டிருந்தால் யாழ்ப்பாண மக்கள் இன்று இருளில் மூழ்கியிருக்க மாட்டார்கள்.

ஆனால் அந்த நல்லிணக்கத் திட்டத்திற்காக பில்லியன்கள் செலவிடப்பட்டன. சமாதானம் பற்றிய பாடலுக்கு பில்லியன்கள் செலவழிக்கப்பட்டன. யாழ்ப்பாண மக்களுக்கு ஒரு குடிதண்ணீர்க் குழாய் கூட வழங்கப்படவில்லை. நாங்கள் செய்து கொண்டிருந்த பணி 2015ல் நிறுத்தப்பட்டது. நாம் அதை மீண்டும் தொடங்க வேண்டும்.

2019ஆம் ஆண்டு மீண்டும் இந்த நாட்டைக் கைப்பற்றிய போது, நல்லாட்சியின் மூலம் பின்னோக்கிச் சென்ற நாட்டை மீண்டும் கட்டியெழுப்பத் திட்டமிட்டோம். ஆனால் திடீரென்று கொவிட் தொற்று ஏற்பட்டது. அந்த நேரத்தில் பொறுப்புள்ள அரசாங்கம் என்ற வகையில் நாங்கள் எமது மக்களைப் பாதுகாக்கவே விரும்பினோம். நாம் அதை செய்தோம்.

வடக்கு மக்களைப் போன்று தென்னிலங்கை மக்களையும் தொற்று நோயிலிருந்து பாதுகாக்க முடிந்தது. உங்கள் மாகாணங்களில் 2015ஆம் ஆண்டுக்குப் பின்னர் இடைநிறுத்தப்பட்ட அபிவிருத்திச் செயற்பாடுகளையும், மக்களின் வாழ்க்கையை மீளக் கட்டியெழுப்பும் செயற்பாடுகளையும் ஆரம்பிப்போம் என உறுதியளிக்கின்றோம். உங்கள் அனைவருக்கும் சிறந்த எதிர்காலம் அமைய பிரார்த்திக்கிறேன். – எனப் பிரதமர் தெரிவித்தார்.

## கோட்டாவுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

எதிர்வரும் 25 ஆம் திகதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தம்முடன் பேச்சு நடத்தவருமாறு ஜனாதிபதி அழைத்துள்ள நிலையில் அந்தப் பேச்சுத் தொடர்பில் ரெலோ இந்த முடிவை எடுத்துள்ளது.

ரெலோவின் தலைமைக்குழுவின் தற்போதுள்ள 19 உறுப்பினர்களில் 16 பேர் நேற்று முன்தினம் கூடி இத்தகைய ஒரு முடிவை எடுத்தமையை ரெலோவின் பேச்சாளர் குருசுவாமி சுரேந்திரனும் உறுதிப்படுத்தினார்.

ஆனால் கூட்டமைப்பின் மற்றைய இரு பங்காளிக் கட்சிகளான இலங்கைத் தமிழரசுக் கட்சியும் புளொட்டும் ஜனாதிபதியுடனான சந்திப்பில் பங்குபற்ற முடிவு செய்திருக்கின்றன எனத் தெரிகின்றது.

மேலும் கட்சியின் நிலைப்பாடு குறித்து கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளிடம் தெரிவித்துள்ளதாகவும், அவர்களும்தமது இந்தமுடிவுக்கு ஆதரவளிக்க வேண்டும் என்றும் செல்வம் அடைக்கலநாதன் கேட்டுக்கொண்டார்.

யாழ்ப்பாணத்தில் புத்தர் சிலை நிறுவுகின்ற செயற்பாடு நேற்றும் நடை பெற்ற நிலையில் – இந்த அரசாங்கம் இக்கட்டான நிலைமையில் இருக்கின்ற சந்தர்ப்பத்திலே – அவர்களை காப்பாற்றும் செயற்பாட்டில் ஈடுபடக் கூடாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் தமிழர்களுக்காக குரல் கொடுக்கின்ற நாடுகளினுடைய ஒட்டுமொத்த அழுத்தத்தைக் குறைப்பதற்காக, தொடர்ந்து நாங்கள் பேசத் தயாராக இருக்கின்றோம் என்ற வாய்ப்பினை ஜனாதிபதி பெறப்போகின்றார் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அத்தோடு அரசியற் தீர்வுக்காகத்தான் அவர் அழைக்கின்றார் என்று நாம் கற்பனையில் இருந்தாலும் எதற்காகப் பேச்சுக்கு அழைக்கின்றார் என்ற விடயம் ஜனாதிபதி செயலக நிகழ்ச்சி நிரலில் கூடச் சொல்லப்படவில்லை என அவர் சுட்டிக்காட்டினார்.

(செல்வம் அடைக்கலநாதனின் விரிவான பேட்டி 11ஆம் பக்கத்தில்...)

## மூளாயில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

விற்பனை நிலையத்தில் கணக்காளராக பணியாற்றும் காரைநகர் கருங்காலியை சேர்ந்த சங்கரப்பிள்ளை நித்தியானந்தராசா (வயது49) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

யாழ். பல்கலைக்கழக மாணவனான மூளாயைச் சேர்ந்த ஆனந்தகுமார் கஜீபன் என்ற இளைஞரே காயமடைந்தார்.

மூளாய் – மாவடி வீதியில், காளி கோயிலுக்கு சமீபமாக இவ்விபத்து இடம்பெற்றது. இதில் உயிரிழந்தவர் தலையில் படுகாயமடைந்த நிலையில் அதிக இரத்தம் வெளியேறியிருந்தது.

சம்பவ இடத்திற்கு விரைந்த வட்டுக்கோட்டை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். காயமடைந்தவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார். உயிரிழந்தவரின் சடலமும் யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப்பட்டது.

## இரட்டைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இரட்டைக்குழந்தைகளாக பிறந்து வீட்டில் வளர்ந்து வந்த நிலையில் ஆண் குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது. வீட்டில் விளையாடிக்கொண்டிருந்த குழந்தை மலசல கூடத்தினுள் வைக்கப்பட்டிருந்த வெட்டிய தண்ணீர்கானில் விழுந்து உயிரிழந்துள்ளது.

குழந்தையின் உயிரிழப்பு தொடர்பில் புதுக்குடியிருப்புப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர். முல்லைத்தீவு நீதிவான் ரி.சரவணராஜா சம்பவஇடத்திற்குவருகைதந்துபார்வையிட்டு விசாரணைகளை முன்னெடுத்தார். குழந்தையின் உடலம் மரணவிசாரணைகளின் பின்னர் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டது..



# சபரிமலை
# ஸ்ரீ ஐயப்பன் ரேடர்ஸ்
## Sabarimalai Sri Iyappan Traders

இல.315, கண்டிறோட், கிளிநொச்சி.

No. 315, Kandy Road, Kilinochchi.

Tel:- 021 228 3701,076 307 8091




விசேட நிகழ்வுகளுக்கும், வியாபார நிலையங்களுக்கும் இலவச Delivery - அனைத்துத் தேவைகளுக்கும்

077 986 2476 - 077 983 8091 எனும் இலக்கங்களுக்கு வரும் ஓடர்களுக்கு சலுகை வழங்கப்படும்.

076 307 8091, 021 228 3701, 077 986 2470

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## பாவம் நாட்டு மக்கள்!

**இந்திய கடன் உதவித் திட்டம் கிட்டுகின்றது, புதுவருடத்தை ஓரளவு நிம்மதியாகக் கொண்டாடலாம் என்றெல்லாம் நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்தாலும், அத்தகைய நம்பிக்கை மக்கள் மனதில் ஏற்படுவதாகத் தெரியவில்லை. மாறாக, நிலைமை மென்மேலும் மோசமடையும் என்ற அவநம்பிக்கையே மக்கள் மனதில் ஆழமாக வேரோடி வருகின்றது.**

**பால்மா விலையேற்றத்தை அடுத்து, எரிவாயு விலையேற்றம், மின் கட்டண அதிகரிப்பு என்று சம்பளத்தைத் தவிர மிகுதி எல்லாமுமே உயர்ந்து கொண்டு போகின்றமையைப் பார்க்கும் போது புதுவருடத்தில் நிலைமை எப்படி இருக்கும் என்பதை ஊகிப்பது அப்படி ஒன்றும் கஷ்டமான காரியமல்ல என்பதுதான் நிலைவரம்.**

**மக்கள் படும் அவலங்கள், கஷ்டங்கள் தமக்குப் புரிகின்றது என கடந்த புதனன்று நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் விவரித்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, ஆனால் இப்போது மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தன்னால் ஏற்பட்டவையல்ல என்று குறிப்பிட்டு பொறுப்பைக் கைகழுவிட எத்தனிக்கின்றார்.**

**நானாக வரவில்லை, நீங்கள் தான் என்னை இப்பதவிக்குக் கொண்டு வந்தீர்கள் என்ற பாணியிலும் அவர் ஒரு கயிறு விடப் பார்க்கின்றார்.**

**அது முற்றிலும் பொய். கடந்த ஜனாதிபதித் தேர்தலுக்கு இரண்டு வருடங்களுக்கு முன்னரே 'வியத்மக', 'எளிய' என்ற பெயர்களில் அமைப்புக்களைத் தாமே உருவாக்கி, தன்னை ஜனாதிபதி வேட்பாளராக நியமிக்கச் செய்யும் தந்திரோபாயத்தை திட்டமிட்டு நகர்த்தி விட்டு, இப்போது அவற்றை மறைத்து வேடம் போடுகின்றார் அவர். ஜனாதிபதித் தேர்தலில் அவருக்கு மக்கள் 69 லட்சம் பேர் வாக்களித்தனர் என்பது உண்மைதான். அது கூட அவரின் திறமைக்கான தேர்வு அல்ல. அவரும் அவரது தரப்பினரும் கிளப்பிய பௌத்த – சிங்களப் பேரினவாத வெறியினால் கிளர்ந்த பேரினவாத எழுச்சியின் பெறுபேறே அது.**

**இந்த நாட்டின் சிறுபான்மையினரால் நிராகரிக்கப்பட்ட பேரினவாதி ஒருவரை இந்த நாட்டின் பெரும்பான்மை இன மக்கள் தமது நாட்டின் தலைவராக்கி, தங்களின் தலைகளில் தாங்களே மண் அள்ளிப் போட்ட அவலமாக இந்த நாட்டுத் தலைவர் தெரிவு அமைந்து விட்டது.**

**அவரை ஜனாதிபதியாக்கியமையில் இருந்து அவர் கேட்ட – விரும்பிய – எதிர்பார்த்த – அனைத்தையுமே இந்த நாடு அவருக்கு வழங்கியது.**

**ஜனாதிபதித் தேர்தலில் வரலாற்றுப் பெருவெற்றியை பெரும்பான்மை இனத்தவர்கள் அவருக்குத் தேடிக் கொடுத்தனர்.**

**தற்போதைய விகிதாசாரப் பிரதிநிதித்துவத் தேர்தல் முறையின் கீழ் பொதுத் தேர்தலில் ஒரு கூட்டணி மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை வெற்றியை ஈட்டுவது சாத்தியமல்ல என்றனர். அதையும் மீறி, அதையும் சாத்தியமாக்கி, ஜனாதிபதி கோட்டாவின் கைகளில் அரசமைப்பையே தலைகீழாக மாற்றும் அதிகாரத்தை மக்கள் அளித்தனர். அதனை வைத்துத் தனது அதிகாரத்தைக் கட்டுமட்டில்லாமல் அதிகரிக்கும் விதத்தில் இருபதாவது அரசமைப்புத் திருத்தமும் அவருக்காக, அவரால் செய்யப்பட்டது.**

**இலங்கையில் அதிகாரத்தில் இருந்த ஜனாதிபதிகளில் அதிக உச்ச அதிகாரத்துடன் ஆட்சி நடத்தும் வாய்ப்பை கோட்டாபய ராஜபக்ஷவுக்குத்தான் நாட்டு மக்கள் வழங்கினர்.**

**ஆனால், அவரோ இன்று நாட்டு மக்களை வீதிக்குக் கொண்டு வந்து நிறுத்தி விட்டு, இந்த நெருக்கடிகள் எவையும் என்னால் ஏற்பட்டவை அல்ல என கைவிரிக்கின்றார். கை கழுவி விடுகின்றார்.**

**பாவம் நாட்டு மக்கள் – இவரைத் தலைவராகத் தேர்ந்தமைக்கு!**

# பணம் அச்சிடுவதை உடன் குறைக்குக!

## அமைச்சர் பந்துல அறிவுரை



பணம் அச்சிடப்படுவதை உடனடியாக குறைக்க வேண்டும் என அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

நாடு எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடியில் பொருளாதார விஞ்ஞானம் தொடர்பில் போதிய புரிதல் இல்லாத மிகவும் பலவீனமான நாடாளுமன்றத்தை தான் கண்டதில்லை எனவும் அவர் கூறியுள்ளார்.

பணத்தை அச்சிட்டு வறிய மற்றும் குறைந்த வருமானம் பெறுவோர் மத்தியில் ஏன் பகிர்ந்தளிக்கக் கூடாது என்று கூறும் நபர்களும் நாடாளுமன்றத்தில் இருக்கின்றனர் எனவும் பந்துல குணவர்தன குற்றம் சுமத்தியுள்ளார்.

அப்படி செய்தால், நாட்டின் முழுப் பொருளாதாரம் மிகவும் மோசமான நிலைமைக்கு செல்லும் என்பது இவர்களுக்குப் புரியவில்லை. இந்த நிலைமையை புரிந்துக் கொண்டு பணம் அச்சிடப்படுவதை கட்டுப்படுத்த நாடா ளுமன்றம் தலையிட வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இலங்கை மத்திய வங்கி குறுகிய காலத்தில் சுமார் 200 கோடி ரூபா பெறுமதியான நாணயங்களை அச்சிட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகி இருந்தன.

இதன் காரணமாக நாட்டின் பணவீக்கம் அதிகரித்து, பொருள்களின் விலைகள் பல மடங்காக அதிகரித்துள்ளன என பொருளியல் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# வெளிநாட்டிலிருந்து பணம் அனுப்புவோருக்கு இனி ஊக்குவிப்புக் கொடுப்பனவு கிடையாது!

## மத்தியவங்கி அதிரடி அறிவிப்பு

வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்குப் பணம் அனுப்புவோருக்கு முக்கிய அறிவிப்பொன்றை இலங்கை மத்திய வங்கி வழங்கியுள்ளது.

அதன்படி இலங்கைக்குப் பணம் அனுப்புவோருக்கு வழங்கப்பட்ட ஊக்குவிப்பு கொடுப்பனவு இனி வழங்கப்பட மாட்டாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், செலாவணி வீதம் வெளிநாட்டு வேலையாள்களின் பணவனுப்பல்களையும் ஏற்றுமதி வருவாய்களை மாற்றுவதையும் தூண்டும் நோக்குடன் வழங்கப்பட்ட ஊக்குவிப்பு மட்டத்தை விடவும் தற்போது அதிகரித்துள்ளது.

இதற்கமைய, நடைமுறை செலாவணி வீதம், வெளிநாட்டு வேலையாள்களின் வெளிநாட்டுச் செலாவணி பணவனுப்பல்களின் மீதும் ஏற்றுமதியாளர்களின் தேறிய வருவாய் மீதான உயர்ந்த ரூபா பெறுமதியின் மீதும் உயர் வருமானத்தை வழங்குகிறது.

அத்துடன் இந்த மாதம் வெளிநாடுகளிலிருந்து கிடைக்கப்பெறுகின்ற அந்நிய செலாவணியும் அதிகரித்துள்ளது.

எனவே இனி ஊக்குவிப்பு கொடுப்பனவு வழங்கப்பட வேண்டியதில்லை என்ற தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# ஒரு கப் பால் தேநீரின் விலை 100 ரூபாவாக எகிறியது உணவகங்களில் பால் தேநீர் விநியோகம் நிறுத்தம்!

ஒரு கப் பால் தேநீரின் விலை 100 ஆக அதிகரிக்கப்படவுள்ளதாக அகில இலங்கை உணவக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

தற்போதைய சூழ்நிலை காரணமாக சில உணவகங்களில் பால் தேநீர் விநியோகமும் இடைநிறுத்தப்பட உள்ளதாக சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில், உள்ளூர் பால் மாவின் விலையை அதிகரிப்பதற்கு அனுமதி வழங்கப்படவில்லை என கால்நடை வளங்கள் இராஜாங்க அமைச்சர் டி.பி. ஹேரத் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும், உள்ளூர் பால்மா உற்பத்தியை அதிகரிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்குப் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாகக் கூறியுள்ளார்.

இறக்குமதி செய்யப்படும் 400 கிராம் பால் மா பக்கெட் ஒன்றின் விலையை 250 ஆக அதிகரிக்க பால் மா இறக்குமதியாளர்கள் சங்கம் நடவடிக்கை எடுத்தது. இதன்படி, 400 கிராம் பால்மா பொதி ஒன்றின் புதிய விலை 790 ரூபா என்பது குறிப்பிடத்தக்கது.

# இவங்கையில் நடைபெறவுள்ள பிம்ஸ்டெக் மாநாட்டில் பாரதப் பிரதமர் பங்கேற்கார்!

## வருகின்றது உயர்மட்ட குழு

மார்ச் 30 ஆம் திகதி இலங்கையில் இடம்பெறவுள்ள பிம்ஸ்டெக் மாநாட்டில் பாரத பிரதமர் நரேந்திர மோடி கலந்துகொள்ளமாட்டார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆகவே அவருக்குப் பதிலாக வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் மற்றும் செயலர் ஹர்ஷ வர்தன் ஷரிங்லா தலைமையிலான உயர்மட்ட குழு இலங்கை வரவுள்ளது.

இந்த மாநாட்டில் கலந்துக்கொள்வதற்காக இந்தியா உட்பட பிம்ஸ்டெக் உறுப்பு நாடுகளின் தலைவர்களுக்கு உத்தியோகபூர்வ அழைப்பும் விடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி பங்களாதேஷ், பூட்டான், இந்தியா, மியன்மார், நேபாளம், இலங்கை மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளின் தலைவர்கள் மாநாட்டில் கலந்துக்கொள்ளவுள்ளனர்.

இருப்பினும் பிரதமர் மோடியின் இலங்கை விஜயம் இறுதி நேரத்தில் உறுதி செய்யப்பட்டால், பலாலி விமான நிலையத்தின் செயற்பாட்டை மீண்டும் ஆரம்பித்தல் மற்றும் யாழ். கலாசார மையத்தின் திறப்பு விழா என்பன இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கையின் மூன்றாவது சர்வதேச விமான நிலையமாக பலாலியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் அமையப்பெற வேண்டும் என்பதே இந்தியாவின் ஆர்வமாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir

# தற்காலிக மனிதாபிமான நிவாரணமே ரூபா 1 லட்சம் உறவுகளின் உணர்வை கொச்சைப்படுத்தவில்லை!

## நீதி அமைச்சர் சப்றி இப்படி விளக்கம்



வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களுக்கு தற்காலிக மனிதாபிமான அடிப்படையிலேயே ஒரு லட்சம் ரூபா வழங்குவதற்கு தீர்மானித்து அமைச்சரவை அனுமதி பெறப்பட்டுள்ளது.

அதனை உயிர்களின் விலையாகக் கொள்ள வேண்டியதில்லை. உறவுகளின் உணர்வுகளை கொச்சப்படுத்தும் நோக்கம் எமக்கில்லை என்று நீதி அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்றி தெரிவித்தார்.

கடந்த அமைச்சரவை கூட்டத்தொடரின்போது, காணாமல்போன நபர்கள் தொடர்பாக சரியான விசாரணைகளை நடத்திய பின்னர் இறப்புச் சான்றிதழ் அல்லது காணக்கிடைக்கவில்லை என்ற சான்றிதழை பெற்றுள்ள காணாமலாக்கப்பட்டவரின் நெருங்கிய உறவினருக்கு குடும்ப மீள்வாழ்வுக்காக ஒருமுறை மாத்திரம் செலுத்தப்படும் ஒரு லட்சம் ரூபாவைச் செலுத்துவதற்காக நீதி அமைச்சர் அலி சப்றியால் அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டு அனுமதி பெறப்பட்டுள்ளது.

இந்நிலையில், மேற்படி அமைச்சரவைப் பத்திரத்தின் அனுமதிக்கு எதிராக வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்களின் சங்கங்களும், அரசியல், சிவில் தரப்பினரும் மிகக் கடுமையான எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றார்கள்.

இதனையடுத்து நீதி அமைச்சர் அலி சப்றி கருத்து வெளியிடும்போது மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

வலிந்து காணாமலாக்கப்பட்டவர்கள் தொடர்பிலான விசாரணைகளை முன்னெடுப்பதற்காக காணாமலாக்கப்பட்டவர்கள் பற்றிய அலுவலகம் அமைக்கப்பட்டுள்ளது. அதுவொரு சுயாதீனமான கட்டமைப்பாகும். அந்த அலுவலகத்தின் ஊடாக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு அடுத்தகட்டச் செயற்பாடுகள் தொடர்பாகக் கரிசனை கொள்ளப்பட்டுள்ளது.

வலிந்து காணாமலாக்கப்பட்டவர்கள் தொடர்பில் சான்றாதாரங்கள் காணப்படுமாயின் அதனை மேற்படி அலுவலகத்தில் வெளிப்படுத்தி அதன் ஊடாக சட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும். குறிப்பாக சட்டமா அதிபர் ஊடாக விசாரணைகளை முன்னெடுப்பதற்கு சட்ட ஏற்பாடுகள் உள்ளன.

நீதி அமைச்சு என்ற வகையில், சுயாதீனக் கட்டமைப்பான வலிந்து காணாமலாக்கப்பட்டவர்கள் தொடர்பிலான அலுவலகத்துக்கான நிர்வாகம் உள்ளிட்ட விடயங்களுக்கான நிதி ஒதுக்கீடுகள் உள்ளிட்ட வசதிகளை வழங்கி வருகின்றோம்.

அதேநேரம், வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் குடும்ப அங்கத்தவர்கள் தொடர்பிலும் விசேட கவனம் செலுத்தியுள்ளோம். அந்த வகையில் அவர்களுக்கு தொழிற்பயிற்சி, சுயதொழில் ஆரம்பம் உள்ளிட்ட பயிற்சிகளை வழங்கி தொழில் புரிபோராக உருவெடுப்பதற்கு உதவிகளை வழங்குகின்றோம்.

தற்போதைய நிலையில் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்களின் நிலைமைகளைக் கருத்திற்கொண்டு மனிதாபிமான நடவடிக்கையாக அவர்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபா வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனினும், இது அவர்களுக்கானவொரு தற்காலிக நிவாரணமே. மாறாக, அவர்களின் போராட்டத்தை மலினப்படுத்தும் செயற்பாடொன்றல்ல. காணாமலாக்கப்பட்டவர்கள் யாராக இருந்தாலும் மனிதர்கள் என்ற அடிப்படையில் அவர்களின் சொந்தங்கள் படுகின்ற வேதனைகளை நான் நன்கு அறிவேன். அவர்களின் உணர்வுகளை கொச்சைப்படுத்தவில்லை.

அதேநேரம், அவர்களை இந்தப் பணத்தைப் பெற்றுக்கொள்ளுமாறும் அழுத்தங்களை பிரயோகிக்கவில்லை. அரசாங்கத்தின் தற்போதைய நிலையில் இந்தத் தொகையைவிடவும் அதிகமானதை வழங்க முடியாத நிலைமைகள் உள்ளன என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும். – என்றார்.



# காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலைக்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ விஜயம் செய்தார்!

யுத்தம் காரணமாக மூடப்பட்ட காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலைக்குப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேற்று (ஞாயிற்றுக்கிழமை) விஜயம் செய்தார்.

1950 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை 1990 ஆம் ஆண்டு யுத்தம் காரணமாக மூடப்பட்டது.

2021 ஆம் ஆண்டு பெப்ரவரி 08 ஆம் திகதி அமைச்சரவை தீர்மானத்தின்படி காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையின் எஞ்சிய கட்டடங்களை எதிர்கால அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தத் தீர்மானிக்கப்பட்டது.

எனினும் 80 வீதமான கட்டடங்களைப் புனரமைத்துப் பயன்படுத்த முடியும் எனப் பிரதமரின் விஜயத்தின் போது தெரியவந்துள்ளது. அதன்படி காங்கேசன்துறை சீமெந்து தொழிற் சாலையைப் புனரமைக்க அரசாங்கம் முன்வந்துள்ளது.

பிரதமருடன் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் மற்றும் இலங்கை சீமெந்து கூட்டுத்தாபனத்தின் தலைவர் காமினி ஏகநாயக்க ஆகியோரும் சென்றிருந்தனர்.

# குடும்ப ஆட்சி நடத்தும் ராஜபக்ஷக்கள் நாட்டுக்கு ஏற்பட்ட ஒரு சாபமேயாகும்!

## ஹிருணிகா பிரேமச்சந்திர காட்டம்



'குடும்ப ஆட்சி நடத்தும் ராஜபக்ஷக்கள், நாட்டுக்கு ஒரு சாபம் ஆகும்.' என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிறேமச்சந்திர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவிக்கையில் –

தற்போதைய அரசு எவரின் ஆலோசனையையும் செவிமடுப்பதில்லை, தன்னிச்சையாகத் தீர்மானம் எடுக்கின்றது. மின்சாரக் கட்டணம் ஐந்து மடங்கு அதிகரிக்கும் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இறுக்கமான பொருளாதாரக் கொள்கையை நடைமுறைப்படுத்தினால் அரசுக்கு எதிர்க்கட்சி ஆதரவளிக்கும். எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குச் சிறந்த பொருளாதார அறிவுள்ளது.

தற்போதைய நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தன்னிச்சையாகச் செயற்படுகின்றார். இந்தியாவிடமிருந்து பெற்ற கடனைச் செலவு செய்த பின்னர் அவர் கடன் பெறுவதற்காக வேறு ஒரு நாட்டுக்குச் செல்வார்.

ஜனாதிபதியாலோ, பிரதமராலோ பஸில் ராஜபக்ஷவின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த முடியவில்லை. ராஜபக்ஷக்களின் குடும்ப ஆட்சியில் பஸிலின் கை மேலோங்கியுள்ளது. குடும்ப ஆட்சி நடத்தும் ராஜபக்ஷக்கள், நாட்டுக்கு ஒரு சாபம் ஆவர். – இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

# ராஜபக்ஷக்களுக்கு உயிர்கொடுக்க முடியாது சர்வகட்சி மாநாட்டை நாம் புறக்கணிப்போம்!

## கஜேந்திரகுமார் எம்.பி. திட்டவட்டம்



ஒட்டுமொத்தமான மக்களின் வெறுப்பைச் சந்தித்து வீழ்ச்சி கண்டுள்ள ராஜபக்ஷக்களுக்கு சர்வகட்சி மாநாட்டில் பங்கேற்று உயிர்கொடுக்க முடியாது என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

சர்வகட்சி மாநாட்டில் பங்கேற்பது தொடர்பாகக் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ராஜபக்ஷக்கள் மீண்டும் ஆட்சிப்பொறுப்பைக் கையிலெடுத்து இரண்டு ஆண்டுகளாகின்றபோதும் தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் கலந்துரையாடுவதற்கே தயக்கம் காண்பிக்கின்றார்கள். அதுமட்டுமன்றி நாட்டில் இனப்பிரச்சினையே இல்லையென்று கூறியும் வருகின்றனர்.

இதனைவிடவும் வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவினர்கள் தமது அன்புக்குரியவர்களைத் தேடி போராட்டங்களைச் செய்து வருகின்ற நிலையில் காணாமலாக்கப்பட்டவர்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபா தருவதாகக் கூறி மக்களின் வேதனையுடன் விளையாடுகின்றார்கள்.

அதேபோன்று பயங்கரவாதத் தடைச் சட்டத்தைத் திருத்துவதாகக் கூறினாலும், நீண்டகாலத்துக்கு நீதிமன்றில் முன்னிலைப்படுத்தாது தடுத்து வைத்தல் உள்ளிட்ட முக்கியமான விடயங்களைக் கைவிடுவதற்குத் தயாராக அவர்கள் இல்லை. வெறுமனே கண்துடைப்புக்கானதொரு செயற்பாடாகவே பயங்கரவாத சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு முயற்சிக்கின்றனர்.

அதேநேரம், இனப்படுகொலையையும், மனித உரிமைகள், மனிதாபிமானச் சட்ட மீறல்களையும் புரிந்துள்ள ராஜபக்ஷ அரசாங்கம் அவற்றுக்கான பொறுப்புக்கூறலைச் செய்வதற்குத் தயாராக இல்லை என்று மேலும், அண்மைய நாள்களில் பொருளாதார நெருக்கள் காரணமாக அரசாங்கத்தின் மீது அனைத்து இன மக்களும் வெறுப்பையே வெளிப்படுத்தியுள்ளனர்.

இத்தகையதொரு தருணத்தில் நாம் மாநாட்டில் பங்கேற்பதானது வீழ்ச்சி கண்டிருக்கும் ராஜபக்ஷ குடுத்பத்துக்கு மீண்டும் புத்துயிர் அளிப்பதற்கு நிகரானதாக மாறிவிடும். ஆகவே, இவ்விதமான பின்னணிகளைக் கொண்டவர்கள் கூட்டும் சர்வகட்சி மாநாட்டில் பங்கேற்பதில் தமிழ் மக்களுக்கு எவ்விதமான நன்மைகளும் கிடைக்கப்போதில்லை. – என்றார்.

# ஆண்டவனால் 'அம்மையே' அழைக்கப்பட்ட தமிழ்த்தாய் !

மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
(மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர், மெல்பேண், ஆஸ்திரேலியா)

பக்திப் பெருவெளியில் பல அடியார்கள்வருகிறார்கள். ஒவ்வொரு அடியாரும் ஒவ்வொரு விதத்தில் உண்மைப்பொருளாம் அந்தப் பரம் பொருளை நாடியும், தேடியுமே நிற்கிறார்கள். தேடும் விதமும், நாடும் விதமும் வேறுபாட்டைக் காட்டி நின்றாலும் அவர்களின் சிந்தையெலாம் இறைவன் மட்டுமே என்பதுதான் மனங்கொள்ளல் வேண்டும். வருகின்ற அடியார்களில் கற்றவரும் இருப்பர். கல்லாதவரும் இருப்பர். அந்தஸ்தில் உயர்ந்தவரும் இருப்பர். அதில் குறைந்தவர்களும் இருப்பர். ஆனாலும் அவர்கள் அனைவரையும் இணைப்பது ஆண்டவனது அடியார்கள் என்னும் பிணைப்பேயாகும். ஆண்களும் இருப்பார்கள். பெண்களும் இருப்பார்கள். ஆண்டியும் இருப்பர். அரசரும் இருப்பர். அனைவரும் பக்தி என்னும் பாதையில் பயணிக்கும் பக்குவமான பரமனின் பயணிகளேயாவர். அந்தப் பயணிகள் வரிசையில் ஒருவர் சற்று வித்தியாசமானவராக அமைகின்றார். அவர் யாரென்று அறிந்திட ஆவல் மேலிடுகிறதல்லவா? வாருங்கள் அவரைக் காணுவோம்.

'அம்மையே அப்பா ஒப்பிலா மணியே', என்று ஆண்டவனையே அடியார்கள் விழித்துப் பாடுவார்கள். ஆண்டவனை அடியார்கள் யாவருமே 'அப்பன் நீ அம்மை நீ' என்றுதான் அல்லும்பகலுமே ஆராக்காதலுடன் ஏற்றிப் போற்றியும் நிற்பார்கள். இதுதான் யாக இருந்து வருகிறது. அம்மையே அப்பா என்று அடியவர்களால் ஏற்றிப் போற்றி நிற்கும் எப்பிரானே ஓர் அடியவரை 'எம்மைப் பேணும் அம்மை இவள்' என்று 'அம்மையே!' என அருள் சுரந்து அழைத்தாராம். ஆண்டவனால் 'அம்மையே' என்று அழைக்கப்படும் அளவுக்கு உரித்தாய் நின்றவர்தான் தமிழீன்ற தவப்பு தல்வி காரைக்கால் அம்மையார் அவர்கள்.



கரைக்கால் அம்மையார் குருபூசை இன்று

பக்தி உலகிலே நால்வருக்கும் மூத்தவர். நால்வரும் பக்திப் பெரு வெளியில் உத்வேகமாய் காலூன்றிப் பயணப்பட முன்னோடியானவர். அவர்களால் பாடப்பட்ட பக்திப் பனுவல்களுக்கெல்லாம் ஆசானாகவும் விளங்கியவர். அவர்கள் எப்படியெல்லாம் தமிழில் இறைவனது திருவருளினைப் பாடலாம் என்பதற்கெல்லாம் பாவடிவுகளை, பா இனங்களையெல்லாம் காட்டி நின்ற பேராளுமை என்று அவரைப் பல நிலைகளில் நோக்கக்கூடியதாகவே இருக்கிறது.

சைவபக்தி வரலாற்றில் அம்மையாரின் வருகை மிகவும் முக்கியத்துவம் மிக்கதாகும். இவர் இறைவனை உருவகிக்கும் பாங்கு, இறைவனை விழிக்கும் பாங்கு யாவுமே இவருக்கே தனித்துவமான ஒன்றாகவே விளங்குகிறது என்பதுதான் உண்மையாகும். அன்பினுருவமாய் ஆண்டவனை இவர் காணுகின்றார். இந்த உலகத்தைத் தோற்றுவித்த முதல்வனாய் விளங்குகிறான் என்று போற்றிப்பாடுகின்றார். அத்வைதத்தை ஆதிசங்கரரே பரப்பினார் என்று அறிகின்றோம். ஆனால் காரைக்கால் தந்த எங்கள் தமிழ்ச்செல்விதான் அத் வைதத்தின் முன்னோடியாக இருந்திருக்கிறார் என்பதை அவரின் பாடல்களின் கருப் பொருள்களால் அறியக்கூடியதாக இருக்கிறது என்பது மனமிருத்த வேண்டிய கருத்தாகும். ஈசனே சகலமும் என்னும் கருத்தை அம்மையார் சுட்டுவதன் மூலம் அரன், அரி, அயன் என்னும் அத்தனை நிலையும் ஒன்றாய் அடங்குவதையே வெளிப்படுத்தி நிற்கிறார் என்பதும் நோக்கத்தக்கதாகும்.

**அறிவானும் தானே அறிவிப்பான் தானே**
**அறிவாய் அறிகின்றான் தானே - அறிகின்ற**
**மெய்ப்பொருளும் தானே விரிசுடர் ஆகாயம்**
**அப்பொருளும் தானே அவன்**

என்று அற்புதத் திருவந்தாதியில் குறிப்பிடுகிறார். அறிபவன், அறிவிப்பவன், அறிவாய் இருந்து அறிகின்றவனும் அறிகின்ற மெய்ப்பொருளும் அவனே. ஐம்பூதங்களாக விளங்குபவனும் அவனே என்று அம்மையார் குறிப்பிட்டுக் காட்டும் நிலையை அத்வைதம் என்று தானே பொருள்கொள்ளல் வேண்டும்.

காரைக்கால் தந்த எங்கள் தமிழ்ச் செல்வியின் பக்திப் பெருஞ் சொத்தாய் சைவத்துக்கு வாய்த்திருப்பவைதான் மூத்த திருப்பதிகங்கள், திருவிரட்டை மணிமாலை, அற்புதத் திருவந்தாதி என்பனவாகும். எம் பெருமான் சிவனது நடனம் பற்றியதாகவே இவரின் பாடல்கள் அமைந்திருக்கின்றன என்பதும் நோக்கத்தக்கதாகும். அம்மையார் அவர்களுக்கு முன்பிருந்த தமிழர்கள் சிவனைப் பற்றியோ, அவரது உருவத்தைப் பற்றியோ, அவரொரு வடிவுகடந்த பொருள் என்பவையோ , அதுமட்டுமல்ல அவர் ஒரு முழுமுதற் பொருள் என்பதையோ நன்கு உணர்ந்தவாரக இருந்தாலும் அந்தப் பரம்பொருளுக்கு உரித்தான வடிவம்தான் என்ன என்று தெரியாமல் இருந்தார்கள் என்றும், அவர்களுக்கு உன்னை நான் எப்படித்தான் காட்டுவேனோ என மனமெண்ணி அம்மையார் நிற்பதையும் இங்கு அவரின் பாடல் வாயிலாகவே காணமுடிகிறது.

**அன்றும் திருவுருவம் காணாது ஆட்பட்டேன்**
**இன்றும் திருவுருவம் கண்டிலேன் - என்றுந்தான்**
**எவ்வுருவோ நும்பிரான் என்பார்க்கு என்**
**உரைக்கேன்**
**எவ்வுருவோ நின் உருவம் ஏது**

அம்மையார் இறைவனைப் பார்த்தவிதம் வேறு. ஆனால், மற்றவர்களுக்கும் காட்ட அவர் எம்பெருமானிடமே வழியைக் கேட்டு நிற்கும் பாங்கு சற்று வித்தியாசமானதாக இருக்கிறதல்லவா! என்றாலும் அவர் அந்தப்பரம் பொருளை – வேதியனாக, வேதப் பொருளாக என்றெல்லாம் அடையாளப்படுத்துகிறார். உணருவார் உணருங்கள் என்பதும் தொக்கு நிற்பதாய்க் கொள்ளலாம் அல்லவா!

**வேதியனை வேதப் பொருளான வேதத்துக்கு**
**ஆதியனை ஆதிரையாநன் னாளானைச் -**
**சோதிப்பான்**
**வல்ஏஅன மாய்ப்புக்கு மாலவனும் மாட்டாது**
**கில்லேன அமா என்றான் கீழ்**

பக்தியைப் பாடவந்த அம்மையார் தேமதுரத் தமிழையும் தன்னுடைய அகத்தில் ஆழமாய் வைத்திருந்தார் என்பதும் மிகவும் முக்கியமாகும். அறத்தைப் பாடும் வடிவமான வெண்பாவைக் கையாளுகின்றார். அந்தப் பாவகை உணர்ச்சியைப் புலப்படுத்த உகந்ததன்று எனவெண்ணி விருத்தப்பாவைக் கையிலெடுக்கிறார். தமிழின் பாவகைகள் எவற்றுக்கெல்லாம் உகந்தன எனச் சிந்தித்த அம்மையாரின் வழி தமிழ் வழியாக அமைகிறதல்லவா? தமிழால் பக்தயைக் காட்ட முயலும் அம்மையார் பின்வந்த அடியார்க்கெல்லாம் தலைமகளாய், தமிழ்மகளாய் விளங்குகிறார் அல்லவா! அம்மாயாரின் பதிகங்களை 'மூத்த நல் திருப்பதிகங்கள்' என்று தெய்வப்புலவர் சேக்கிழார் பெருமைப்படுத்துகின்றார். அம்மையாரின் பின்வந்த சம்பந்தப் பெருமான் பாடிய பக்திப்பனுவல்கள் பதிகங்கள் என்று தான் பெயர் பெறுகின்றன. இதனால் அம்மையின் பாடலையும் பதிகம் என்னாது 'மூத்த நல்' என்னும் அடைமொழி கொடுத்தமை அம்மையின் மீது சேக்கிழார் கொண்டிருந்த பெருமதிப்பையே காட்டுகிறது எனலாம். பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடியவராக சேக்கிழார் இருந்தாலும் அவரும் தேமதுரத் தமிழைத் தமது இதயத்தில் இருத்தி வைத்திருந்தார் என்பதும் நோக்கத்தக்கது. முழுக்க முழுக்க தமிழ்மரபு சார்ந்த சூழலையும், கதையையுமே அவர் பெரியபுராணத்துக்காக எடுத்திருக்கிறார். அப்படியானவர் அம்மையாருக்காகவே காரைக்கால் அம்மையார் புராணம் அமைத்தாரோ தெரியவில்லை. தமிழை விரும்பியவர், தமிழை விரும்பிய அம்மையை; இறைவனே அவரைத் தன் தாய் என்று கூறுமாறு அமைத்தமை மனங்கொள்ளத்தக்கது. தாய் வயிற்றிலிருந்துதான் எதுவுமே பிறக்க வேண்டும். அந்தத் தாயாக காரைக்கால் அம்மையாரைச் சேக்கிழார் பார்க்கிறார். முழுமையான சைவமும், சிவனின் வழிபாடு என்பதும் காரைக்கால் தாயின் வயிற்றில்தான் பிறந்திருக்கிறது என்னும் கருத்தை யாவரும் மனமிருத்தல் அவசியமானதேயாகும். பிற்காலத்தில் தமிழில் சுவையான இலக்கியங்கள் அமைவதற்கு உரிய பாவினமாக விருத்தமே பொருத்தமாய் இருக்கும் என்பதை முன்கூட்டியே கணித்து அந்தப் பாவினத்தைத் தேர்ந்தெடுத்துக் கையாண்டு காட்டிய தமிணத் தாயாகவே அம்மையார் விளங்குகிறார் என்பதும் தமிழுக்குப் பெருமையல்லவா! அம்மையாரையும் அடியார்களையும் பாடவந்த சேக்கிழார் பெருமான் பெரியபுராணத்தை விருத்தப்பாவால் பாடுவதற்கு வழிசமைத்தவரும் காரைக்கால் தந்த தமிழ்ச் செல்வி அம்மையாரே என்பதும் மனங்கொள்ளல் வேண்டும்.

(07ஆம் பக்கம் பார்க்க)



# இந்தியாவின் பணம் கிடைக்கப்பெற்றால் மாத்திரமே புத்தாண்டுக் கொண்டாட்டம்!

## இறக்குமதியாளர் சங்க ஊடகப் பேச்சாளர் தகவல்

இலங்கைக்குத் தேவையான உணவுப் பொருள்கள் உட்பட அத்தியாவசியப் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்காக இந்தியா வழங்கும் 100 கோடி டொலர் கடன் சரியான முறையில் கிடைக்கும் வரை தமிழ் – சிங்கள புத்தாண்டுக்குத் தேவையான பொருள்களை இறக்குமதி செய்ய முடியாது என அத்தியாவசிய உணவு பொருள் இறக்குமதியாளர்கள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் நிஹால் செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் இந்த கடனுதவி கிடைக்கவில்லை என்றால், உணவுப் பொருள் களை இறக்குமதி செய்ய மாற்று வழிகள் கிடையாது எனவும் அவர் கூறியுள்ளார்.

ஏற்கனவே அத்தியாவசிய உணவுப் பொருள்கள் இறக்குமதி செய்யப்பட்ட ஆயிரத்துக்கும் மேற்பட்ட கொள்கலன்கள் துறைமுகத்தில் தேங்கியுள்ளன. டொலர் இல்லாத காரணத்தால், அவற்றில் உள்ள பொருள்களை இறக்க முடியாதுள்ளது. இந்தியாவிடம் இருந்து கடனுதவி கிடைத்தாலும் பொருள்களை இலங்கைக்கு இறக்குமதி செய்து, இறக்குவதற்கு நீண்டகாலம் செல்லும். சம்பந்தப்பட்ட துறையினர் விரைந்து நடவடிக்கைகளை மேற்கொண்டால், பண்டிகைக் காலத்தில் உணவுப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படுவதைத் தவிர்க்க முடியும் எனவும் செனவிரத்ன மேலும் தெரிவித்துள்ளார்.

# புண்ணாக்கு சாப்பிட்டு கோட்டா மீது கோபத்தை வெளிப்படுத்திய இளைஞர்!

நாட்டில் தற்போது அத்தியாவசியப் பொருள்கள் உட்பட மக்களின் அன்றாட பயன்பாட்டுக்குத் தேவையான பல பொருள்களின் விலைகள் பாரியளவில் அதிகரிக்கப்பட்டுள்ளன. இந்த நிலையில், 'இதோ, இனி புண்ணாக்கு சாப்பிடுங்கள்' என இளைஞரொருவர் கடும் தொனியில் கோபத்தை வெளிப்படுத்தியுள்ளார்.


நாட்டின் தற்போதைய நிலைமை தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

இன்று பாண் சாப்பிட வழியில்லை, ஓர் இறாத்தல் பாண் 100 ரூபா பரோட்டா வாங்கலாம் என்று பார்த்தால் ஹோட்டலில் பரோட்டா போட எரிவாயு இல்லையாம்.

புண்ணாக்கை சாப்பிட சொல்கின்றார்கள்! அதன் பின்னர் நான் புண்ணாக்கு 250 கிறாம் வாங்கி வந்தேன்! இனி இதை சாப்பிடுகிறேன்! வேறு என்ன தான் செய்ய! து..து... சாப்பிடவும் முடியவில்லை! ஆனால் எப்படியும் சாப்பிட்டு தானே ஆக வேண்டும்!

இப்படியாவது நாம் வாழவேண்டும்! தண்ணீர் கொஞ்சம் சேர்த்து தான் சாப்பிடவேண்டும்! சொல்லிவேலையில்லை. நந்தசேன நீ செய்த வேலை! உங்களுக்கும் புண்ணாக்கு வேண்டுமென்றால் சொல்லுங்கள்! ஒரு கிலோகிராம் 70 ரூபாதான் எனக் குறிப்பிட்டுள்ளார்.

# ஐ.நா. முக்கிய ஆலோசனைக் குழு உறுப்பினராகத் தமிழர் நியமனம்!



ஐக்கிய நாடுகள் சபையின் முக்கிய ஆலோசனைக் குழுவில் சிங்கப்பூரின் மூத்த அமைச்சர் தர்மன் சண்முகரத்னம் நியமிக்கப்பட்டுள்ளார் என அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மூத்த அமைச்சர் தர்மன் சண்முகரத்னம், ஐ.நாவின் புதிய உயர்மட்ட பலதரப்பு ஆலோசனைக் குழுவின் உறுப்பினராக நியமிக்கப்பட்டு உள்ளார். 12 உறுப்பினர்களைக் கொண்ட குழுவில் உலகத் தலைவர்கள், நிபுணர்கள், அதிகாரிகள் இடம்பெற்றுள்ளனர்.

உலகம் எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினைகளை குழு ஆராய்ந்து பரிந்துரைகளை வழங்கும். இந்தப் பரிந்துரைகள் 2023 இல் நடைபெறவுள்ள ஐ.நா. உறுப்பு நாடுகள் பங்கேற்கும் உத்தேச எதிர்கால உச்சநிலை மாநாட்டில் தெரிவிக்கப்படும். ஐக்கிய நாடுகள் சபையில் தலைமைச்செயலாளர் அன்டோனியோ குட்டெரஸ் புதிய ஆலோசனைக் குழு பற்றிய விவரங்களை வெளியிட்டார். 'புதிய குழுவுக்கு ஐ.நா. பல்கலைக்கழக கொள்கை ஆய்வு நிலையம் ஆதரவு வழங்கும் என்று அறிக்கையில் தலைமைச் செயலாளர் தெரிவித்தார்.

கடந்த செப்ரெம்பர் மாதம் வெளியிடப்பட்ட அறிக்கையில் உலகம் எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினைகள் வலுவான முறையில் நிர்வகிக்கப்பட வேண்டும் என்று திரு குட்டெரஸ் வலியுறுத்தி இருந்தார்.

# ஆண்டவனால் .......

(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

பின்வந்த அடியார்கள் பக்தியொடு தமிழையும் இணைத்திட அம்மையாரே முதலாசான். திருவாலங்காட்டு மூத்ததிருப்பதிகத்தின் இறுதிப்பாடலில் –

'காரைக்கால் பேய் செப்பிய செந்தமிழ் பத்தும் வல்லார் சிவகதி சேர்ந்தின்பம் எய்து வாரே ' என்று தமிழை முன்னிலைப்படுத்துகின்றார். இதனைப் பின்பற்றியே சம்பந்தப்பெருமானும் 'நற்றமிழ் ஞானசம்பந்தன் ' என்கிறார். மற்றைய அடியார்களும் தமிழைச் சேர்த்துச் சொல்லுவதும் நோக்கத்தக்கது.

அத்துடன் அமையாரது தமிழின் சுரங்களையும், வாத்தியங்களையும் கூட காட்டி நிற்கிறார் அம்மையார்,

**துத்தம் கைக்கிள்ளை விளரி தாரம்**
**உழை இளி ஓசை பண் கெழுமப்பாடிச்**
**சச்சரி கொக்கரி தக்கை யோடு**
**தகுணி தந்துந்தபி தாளம் வீணை**
**மத்தளம் கரடிகை வன்க மென்தோல்**
**தமருகம் குடமுழா மொந்தை வாசித்து**
**அத்தனை விரவினொடு ஆடும் எங்கள்**
**அப்பன் இடம் திருவாலங் காடே**

**அழலாட அங்கை சிவந்ததோ! அங்கை**
**அழகால் அழல் சிவந்தவாறோ! – கழலாட**
**பேயோடு கானில் பிறங்க அனலேந்தித்**
**தீயாடுவாய் இதனைச் செப்பு**

சுரங்களை , வாத்தியங்களைக் காட்டிய அம்மையார் இறைவனின் திரு நடனத்தையும் அவனின் ஒவ்வொரு அம்சத்தையுமே பக்தியைக் கலைநயத்துடன் இணைத்து காணுகின்றமை நோக்கத்தக்கது. 'அம்மையே ' என்று அழைத்தவுடன் அவரிடம் அம்மையார் வேண்டும் பாங்கிலும் ஆடற்கலையை வலியுறுத்தி தன்னுடைய வேண்டுகோளை முன்வைப்பதும் நோக்கத்தக்கது.

**இறவாத இன்ப அன்பு**
**வேண்டிப்பின் வேண்டு கின்றார்**
**பிறவாமை வேண்டும் மீண்டும்**
**பிறப்புண்டேல் உன்னை என்றும்**
**மறவாமை வேண்டும் இன்னும்**
**வேண்டும்நான் மகிழ்ந்து பாடி**
**அறவாநீ ஆடும் போதுன்**
**அடியின்கீழ் இருக்க என்றார்**

பிறவாமையை வேண்டும் நிலையிலும் – அப்படி ஒரு பிறவியானது வாய்க்குமானால் ஆண்டவனே உன்னையென்றுமே மறவாமலும் இருக்க வேண்டும். அது மாத்திரமல்ல – நீ ஆட வேண்டும்! நீ ஆடுவதை உன் அடியின் கீழ் இருந்து பார்க்க வேண்டும். தமிழிலே மகிழ்ந்து நான் பாடவும் வேண்டும் என்று வேண்டி நிற்கும் காரைக்கால்தந்த தமிழ்ச் செல்வியை ஆண்டவன்' அம்மையே' என்று அழைத்தமை மிகவும் பொருத்தமாய் இருக்கிறதல்லவா!

# எதிர்க்கட்சிக்கு சர்வகட்சி மாநாட்டுக்கு அழைப்பு இதுவரை விடுக்கப்படவில்லை!

சர்வகட்சி கூட்டத்தில் பங்குபற்றுவதற்கான அழைப்பு இதுவரை தமக்கு கிடைக்கவில்லை என பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

சர்வகட்சி கூட்டம் தொடர்பாகக் கருத்து தெரிவிக்கும்போதே அக்கட்சியின் தேசிய அமைப்பாளர், நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க இதனைத் தெரிவித்தார்.

அழைப்பை ஏற்றுக்கொள்வதா இல்லையா என்பது தொடர்பாகக் கட்சியின் நாடாளுமன்ற குழு மற்றும் நிர்வாகக் குழுவால் தீர்மானிக்கப்படும் எனக் கூறினார்.

எவ்வாறாயினும், எதிர்க்கட்சிகளின் கருத்துக்களுக்கு அரசாங்கம் செவிசாய்க்காத சூழ்நிலையில் இவ்வாறான சர்வகட்சி கூட்டம் நடத்தப்படுமா என்பது சந்தேகமே என்றும் அவர் குறிப்பிட்டார்.

# தமிழ்த்தேசியப் பசுமை இயக்க ஏற்பாட்டில் கோண்டாவிலில் குருதிக்கொடை முகாம்!



தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் வைத்தியசாலைகளில் அவசர சிகிச்சைகளுக்குக் குருதிக்கு நிலவும் தட்டுப்பாட்டைக் கருத்தில் கொண்டு குருதிக்கொடை முகாம்களைப் பல்வேறு இடங்களிலும் ஏற்பாடு செய்து வருகின்றது.

அதன் தொடர்ச்சியாக கடந்த சனிக்கிழமை கோண்டாவிலில் குருதிக்கொடை முகாமை ஒழுங்குபடுத்தப்பட்டது.

கோண்டாவில் தில்லையம்பதி சிவகாமி அம்பாள் திருமண மண்டபத்தில் இடம்பெற்ற இந்தக் குருதிக்கொடை முகாமில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கியைச் சேர்ந்த வைத்தியர் கி.ஸ்ரீ. பாஸ்கரன் தலைமையிலான குழுவினர் கலந்துகொண்டு குருதிச் சேகரிப்பில் ஈடுபட்டனர்.



குருதிக்கொடை முகாமில் பங்கேற்ற அனைவருக்கும் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் வழமை போன்று செவ்விரத்தம் பூச்செடிகளை வழங்கி வைத்தமை குறிப்பிடத்தக்கது.

# நுட்பியல் அவத்தை



ஜனனீ தேவானந்த்
(முதுநிலை விரிவுரையாளர்
தகவல் தொழில்நுட்பம்),
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

### உலக ஒழுங்கை மாற்றியமைக்கும் ‘ஹைப்பர்சோனிக்’ நுட்பியல் அவத்தை

ரஷ்யா – உக்ரைன் யுத்தம் தீவிரமடைந்து வரும் சூழலில் தற்போது ஹைப்பர்சோனிக் ஏவுகணைகள் பயன்படுத்தப்படுவது பற்றிய செய்திகள் வெளிவருகின்றன. இந்தச்சூழலில் எதிர்கால மனிதகுலத்திற்கான சவாலாக அமைக்கக் கூடிய இந்த நுட்பியல் அவத்தை பற்றி பார்க்கலாம்.

உலகில் ரஷ்யா, சீனா மற்றும் அமெரிக்கா போன்ற முக்கிய சக்திகள் ஹைப்பர்சோனிக் ஏவுகணையை உருவாக்க பந்தயத்தில் ஈடுபட்டுள்ளன. இந்த ஏவுகணைகளை இடைமறிக்க முடியாதென்று கூறப்படுகிறது. தற்போதைய ஏவுகணை பாதுகாப்பு அமைப்பால் இடைமறிக்க முடியாத அளவுக்கு மிக வேகமாக செல்லக்கூடிய ஏவுகணை அமைப்பாக இது சுட்டிக்காட்டப்படுகின்றது.

எதிர்காலத்தில் இந்த ஹைப்பர்சோனிக் ஏவுகணைகள் வெளியுறவுக் கொள்கையில் பெரும் பங்கு வகிக்கும் என்று நம்பப்படுகின்றது. ஏனெனில் இன்று நுட்பியல் அவத்தையில் சிறந்ததெதுவோ அதுவே புவியியல் அரசியல் சக்தியாக உருவெடுத்துள்ளது. இனி புவிசார் அரசியலின் முக்கிய தூண்களாக ஹைப்பர்சோனிக் ஏவுகணைகள் விளங்குமெனலாம். மேலும், சீனா மற்றும் ரஷ்யா போன்ற நாடுகளின் ‘வெற்றிகரமான’ சோதனைகளில் சமீபத்திய முன்னேற்றங்கள் இந்த நிலைமையை உறுதிப்படுத்துகின்றன.

### ஹைப்பர்சோனிக் ஏவுகணை என்றால் என்ன?

ஒரு ஹைப்பர்சோனிக் ஏவுகணை ஒலியின் வேகத்தை விட ஐந்து மடங்கு வேகமானது, (3, 836 mph). இது வினாடிக்கு 1 மைல் ஆகும். ரஷ்யாவின் Kh-47M2 முஷ்ணொயட வான்வழி ஏவப்பட்ட பாலிஸ்டிக் ஏவுகணை போன்ற சில ஏவுகணைகள், Mach 10 வேகம் (7,672 mph) மற்றும் 1,200 மைல்கள் வரை செல்லும் திறன் கொண்டவை என்று கூறப்படுகிறது.

ஹைப்பர்சோனிக் ஏவுகணைகள் அதிவேக ஜெட் எஞ்சின் உதவியுடன் அதன் இலக்கை அடைகிறது, இது மாக் – 5 ஐ விட அதிக வேகத்தில் செல்ல அனுமதிக்கிறது. இது பாலிஸ்டிக் அல்லாதது – பாரம்பரிய கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளுக்கு (ICBM) எதிரானது, இது அதன் இலக்கை அடைய ஈர்ப்பு விசைகளைப் பயன்படுத்துகிறது.

ஹைப்பர்சோனிக் ஏவுகணைகள் செயல்படத் தொடங்கும் போது, ஏவுகணைகளை இடைமறித்து தாக்கும் தொழில்நுட்பங்களைப்பயன்படுத்தி தடுக்க முடியாது. எளிமையாகச் சொன்னால், ஹைப்பர்சோனிக் ஏவுகணையை இடைமறிக்கும் திறன் கொண்ட செயல்பாட்டு ஏவுகணை பாதுகாப்பு அமைப்பு எதுவும் இல்லை, அதனால்தான் ஹைப்பர்சோனிக் ஆயுதங்களை உருவாக்குவதற்கான போட்டியில் செல்வாக்குச் செலுத்துகிறது.

ஹைப்பர்சோனிக் ஏவுகணைகள் பற்றிய தகவல்கள் மிக ரகசியமாகவே இருந்திருக்கின்றன. ஆனால் சமீபத்திய ரஷ்சிய உக்ரைன் யுத்தம் இதுபற்றிய தகவல்களை கசிய விட்டிருக்கின்றன. பல அரசாங்கங்கள் வெற்றிகரமான சோதனைகள் மற்றும் எதிர்கால திட்டங்களை அறிவிப்பதையும் காணமுடிகிறது.

### ஹைப்பர்சோனிக் ஏவுகணைகள் என்ன தாக்கத்தை ஏற்படுத்தும்?

ஹைப்பர்சோனிக் ஏவுகணைகள் சப்சோனிக் மற்றும் சூப்பர்சோனிக் ஆயுதங்களை விட பல மடங்கு வேகமாக சென்று இலக்கைத் தாக்குகின்றன. அதாவது விமானம் தாங்கி போர்க்கப்பல் போன்ற அதிகமாக பாதுகாக்கப்பட்ட இலக்குகளின் பாதுகாப்பையும் இதனால் தகர்க்க முடியும்.

ஹைப்பர்சோனிக் ஆயுத அமைப்புகளின் மேம்பாடு நாடுகளுக்கு கணிசமாக மேலாதிக்க சக்தியை வழங்க வல்லது. குறிப்பாக ரஷ்யா போன்ற ஒரு பெரிய பிராந்திய சக்தியானது, ஹைப்பர்சோனிக்பலத்தின்மூலம் அதன் அச்சுறுத்தலைப் பயன்படுத்தி, அண்டை நாட்டைஅடிபணியவைக்க முடியும். ஹைப்பர்சோனிக் சக்தி நாடுகளின் ஸ்திரமின்மையை ஏற்படுத்தும், அதிகார சமநிலையை சீர்குலைக்கும். ஒரு நுட்பியல் அவத்தை உலக சமநிலையை சீர்குலைப்பதை இங்கு அவதானிக்கலாம். அதாவது எதிர்காலத்தில் ஈரான் ஹைப் பர்சோனிக் ஆயுதங்களை தயாரித்தால் இஸ்ரேலும் அதில் அதிககவனம் செலுத்தும். தற்போது நேட்டோ – ரஷ்யா மோதலின் விளைவு உக்ரையின் மீதான படையெடுப்பும் ஹைப்பர் சோனிக் ஏவுகணைப் பயன்பாட்டைப்பார்க்கலாம். அதேபோல் அமெரிக்க – சீனா மோதலின் பின்னணியில் விரிவாக்கக் கட்டுப்பாட் டின் அடிப்படையில் ஹைப்பர்சோனிக் ஆயுதங்கள் சிக்கலாக இருக்கலாம். அணுசக்தி திறனோடு ஹைப்பர் சோனிக் திறனும் கொண்ட இரட்டைத்திறன் நாள்கள் எதிர்கால உலக சக்தியாக இருக்கப் போகின்றன.







### சப்சோனிக், சூப்பர்சோனிக் மற்றும் ஹைப்பர்சோனிக் இடையே உள்ள வேறுபாடு என்ன?

சப்சோனிக் – சப்சோனிக் ஏவுகணைகள் ஒலியின் வேகத்தை விட மெதுவாக இருக்கும். US Tomahawk cruise missile, French Exocet மற்றும் Indian Nirbhay போன்ற மிகவும் பிரபலமான ஏவுகணைகள் இந்த வகைக்குள் அடங்கும். சப்சோனிக் ஏவுகணைகள் Mach-0.9 (705 mph) வேகத்தில் பயணிக்கின்றன. சப்சோனிக் ஏவுகணைகள் மெதுவாகவும் எளிதாகவும் இடைமறிக்கக்கூடியவை, ஆனால் அவை இன்னும் நவீன போர்க்களங்களில் பெரும் பங்கு வகிக்கின்றன. தொழில்நுட்ப சவால்களை ஏற்கனவே சமாளித்து தேர்ச்சி பெற்றிருப்பதால், அவை உற்பத்தி செய்வதற்கு மலிவானவை.

சூப்பர்சோனிக் – ஒரு சூப்பர்சோனிக் ஏவுகணை ஒலியின் வேகத்தை (Mach-1) மீறுகிறது, ஆனால் GBch - 3 ஐ விட வேகமானது அல்ல. பெரும்பாலான சூப்பர்சோனிக் ஏவுகணைகள் Mach-2 மற்றும் Mach - 3 இடையே வேகத்தில் பயணிக்கின்றன, இது 2,300 mph வரை இருக்கும். மிகவும் பிரபலமான சூப்பர்சோனிக் ஏவுகணை இந்தியாவின் பிரம்மோஸ் ஏவுகணையாகும். இது தற்போது 2,100 – 2,300 mph வேகத்தில் செல்லும் திறன் கொண்ட அதிவேக சூப்பர்சோனிக் ஏவுகணையாகும்.

ஹைப்பர்சோனிக் – ஒரு ஹைப்பர்சோனிக் ஏவுகணை Mach-5 ஐ விட அதிக வேகத்தில் பயணிக்கிறது. மற்றும் ஒலியின் வேகத்தை விட ஐந்து மடங்கு வேகமானது. ஹைப்பர்சோனிக் ஆயுதங்கள் ஒரு இலக்கை அடையும் போது (குறிப்பாக தற்போதைய சப்சோனிக் க்ரூஸ் ஏவுகணைகளுடன் ஒப்பிடும்போது), எதிரிக்கு கிடைக்கும் எச்சரிக்கை நேரத்தையும், உள் வரும் அச்சுறுத்தலில் ஈடுபட தற்காப்பு அமைப்புகளுக்கு கிடைக்கும் நேரத்தையும் குறைக்கிறது.

தற்போதைய நிலையில் அமெரிக்கா ஹைப்பர்சோனிக் ஏவுகணைத் தயாரிப்பில் ரஷ்யா மற்றும் சீனாவைவிட பின்னுக்கு நிக்கிறது எனலாம். ஏனெனில், அமெரிக்கா தனது அணுசக்தியால் இயங்கும் விமானம் தாங்கிக் கப்பல் குழுக்களை அதிக அளவில் நம்பியிருக்கிறது போலும்.

தற்போது ரஷ்யா குறுகிய மற்றும் நீண்ட தூர ஹைப்பர்சோனிக் திறனைக் கொண்டுள்ளது. ஏனெனில் அந்த நாடு ஐரோப்பிய நேட்டோ உறுப்பினர்களுடனும் அட்லாண்டிக்கின் மறுபுறத்தில் உள்ள அமெரிக்காவுடனும் போராட வேண்டும். எனவே, பல திறனுள்ள ஹைப்பர்சோனிக் ஏவுகணைகளை வரிசையாகக் கொண்டுள்ளது.

எனவே ரஷ்யா – உக்ரைன் யுத்தத்தை , ஹைப்பர்சோனிக் நுட்பியல் அவத்தை மாற்றியமைக்கலாம். எதிர்கால உலக ஒழுங்கு, ஹைப்பர்சோனிக் நுட்பியல் அவத்தையால் மாற்றத்திற்கு உள்ளாகும் என்ற யதார்த்தத்தை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.



காலைக்கதிர் Kalaikkathir

# ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானத்தில் கோபுரத்திற்கான கலச ஸ்தாபனம்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், மார்ச் 21

தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தில் புதிதாக அமைக்கப்பட்ட 87 அடி உயர வாயில் கோபுரத்திற்கான கலச ஸ்தாபன நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

2021ஆம் ஆண்டு அடிக்கல் நாட்டப்பட்டு ஓர் ஆண்டில் குறித்த 9 கலசங்கள் கொண்ட கோபுரம் அமைக்கப்பட்டுள்ளது.

தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் செஞ்சொற்செல்வன் ஆறு.திருமுருகன் தலைமையில் இந்நிகழ்வு வெகு சிறப்பாக இடம்பெற்றது.











## பால் தேநீர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இறக்குமதி செய்யப்படும் 400 கிராம் பால் மா பொதி ஒன்றின் விலை 250 ரூபாவால் நேற்றையதினம் அதிகரிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன், பால் தேநீர் ஒன்றின் விலையும் 100 ரூபாவால் நேற்றைய தினம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

(விரிவான செய்தி 04ஆம் பக்கத்தில்)

## முள்ளிவாய்க்காலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பலர் காயமடைந்த நிலையில் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்

யாழ்ப்பாணம் முல்லைத்தீவு வழித்தடத்தில் பயணிக்கும் தனியார் பஸ் ஒன்றே விபத்துக்குள்ளாகியுள்ளது

விபத்துக்குள்ளான பஸ்ஸில் சுமார் நாற்பதுக்கும் மேற்பட்ட பயணிகள் பயணித்த நிலையில் பலர் படுகாயம் அடைந்தனர். பலர் சிறு காயங்களுக்கு உள்ளாகினர். காயமடைந்தவர்கள் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

தனியார் பஸ் ஒன்றும் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ் ஒன்றும் போட்டிபோட்டு ஓடிய நிலைமையிலேயே இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளதாக சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்துள்ளனர்

சம்பவ இடத்திற்கு வருகை தந்த முல்லைத்தீவு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## ஆலோசனைகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முற்றிலும் விரும்பவில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் அவர் கருத்துத் தெரிவிக்கையில் –

நாட்டில் பொருளாதார நெருக்கடி தீவிரமடைந்துள்ள நிலைமையில் அரசியல் நெருக்கடியும் தற்போது தீவிரமடைந்துள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் ஆட்சி மாற்றம் ஏற்படுவதற்கு முன்னின்று செயற்பட்ட விமல் வீரவன்ஸ மற்றும் உதய கம்மன்பில ஆகியோரை அமைச்சு பதவியில் இருந்து நீக்கியமை முற்றிலும் தவறானது.

நாட்டு மக்கள் அரசாங்கத்தை கடுமையாக விமர்சிக்கிறார்கள். பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் மன நிலையை எம்மால் நன்கு உணர முடிகிறது.

பாரியளவிலான அபிவிருத்தி பணிகளை தற்காலிகமாக நிறுத்தி மக்களுக்கான அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்றுவதில் கவனம் செலுத்துமாறு அரசாங்கத்திற்குப் பலமுறை ஆலோசனை வழங்கியுள்ளோம்.

இருப்பினும் எமது ஆலோசனைகளுக்கு மதிப்பளிக்கப்படவில்லை. நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ சிறந்த ஆலோசனைகளுக்கு மதிப்பளிப்பதில்லை. ஆகவே அவர் தொடர்பில் கருத்துரைக்க முற்றிலும் விரும்பவில்லை.

சிறந்த பதிலை நாட்டு மக்கள் வெகு விரைவில் வழங்குவார்கள். அரசாங்கம் மக்களின் வெறுப்பை பெற்றுக்கொண்டால் அது அரசாங்கத்தின் இருப்பிற்கு பாதிப்பை ஏற்படுத்தும். நல்லாட்சி அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நிலைமையை அரசாங்கம் மீட்டுப்பார்க்க வேண்டும்.

மகா சங்கத்தினரது ஆலோசனைக்கு புறம்பாக செயற்படுமாயின் இனிவரும் காலங்களில் அரசாங்கம் மகா சங்கத்தினரது ஒத்துழைப்பை எதிர்பார்க்க கூடாது. பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காணும் வகையில் சர்வகட்சி மாநாட்டை நடத்த ஜனாதிபதி தீர்மானித்துள்ளமை வரவேற்கத்தக்கது.

அனைத்து அரசியல் கட்சிகளும் தற்போதைய நெருக்கடி நிலைமையைக் கருத்திற்கொண்டு அரசியல் நோக்கங்களை துறந்து ஒன்றிணைந்து நாட்டுக்காக செயற்பட வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## லாஃப் எரிவாயு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சிலிண்டர் ஒன்று 4,199 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

மேலும் 5 கிலோ கிராம் சிலிண்டரின் விலை 1,680 ரூபாவாகவும் மற்றும் 2 கிலோ கிராம் சிலிண்டரின் விலை 672 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

## ரூ12 கோடி தங்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்தத் தங்கத்தைக் கடல் மார்க்கமாக இந்தியாவிற்கு எடுத்து செல்வதற்காக யாழ்ப்பாணத்திற்கு கொண்டுசெல்லும் போதே சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த மோசடியில் ஈடுபட்ட மற்றுமொருவர் நேற்று யாழ்ப்பாணம் மாதகல் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

## ஆளும் கூட்டமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தீர்வை முன்வைக்கவேண்டுமெனவும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு ஆளும் தரப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் பிரமித பண்டார தென்னகோன் இது தொடர்பில் தெரிவிக்கையில் மேலும் கூறியவை வருமாறு:-

அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்றிக்கொள்வதில் பொது மக்கள் எதிர்கொண்டுள்ள நெருக்கடி நிலைமைக்கு நிலையான தீர்வை அரசாங்கம் விரைவாக முன்வைக்க வேண்டும். அரசாங்கத்தின் சரியான தீர்மானங்களை வரவேற்று, தவறான தீர்மானங்களை விமர்சிக்கும் கொள்கையுடன் பொதுஜன பெரமுனவின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றிணைந்து செயற்படுகிறோம்.

எரிபொருள் மற்றும் எரிவாயுப் பிரச்சினை தீவிரமடைந்துள்ளதால் நடுத்தர மக்களின் அன்றாட வாழ்வாதாரம் முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. மக்களின் கருத்துக்களுக்கு மதிப்பளித்து அரசாங்கம் சிறந்த தீர்மானங்களைச் செயற்படுத்த வேண்டும்.

சமூக கட்டமைப்பில் தோற்றம் பெற்றுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு காண அரசாங்கம் விரைந்து செயற்படாவிடின் மக்கள் அரசாங்கத்திற்கு தொடர்ந்து ஆதரவு வழங்குவார்களா என்பது சந்தேகமாகும்.

எரிபொருள் மற்றும் எரிவாயு ஆகியவற்றை பெற்றுக்கொள்ள நீண்ட வரிசையில் காத்திருக்கும் மக்கள் மத்தியில் செல்ல முடியாத அவல நிலைமை அரசியல்வாதிகளுக்கு ஏற்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

# மின்சாரக் கட்டண உயர்வுக்கு எதிர்ப்பு திருகோணமலையில் தீப்பந்த போராட்டம்!







மின்சாரக் கட்டண உயர்வுக்கு எதிர்ப்பு தெரிவித்து திருகோணமலையில் தீப்பந்தம் ஏந்தியவாறு எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை, கண்டி வீதி தம்பலகாமம் பிரதேச செயலகத்துக்கு முன்பாக மின்சார பாவனையாளர் சங்கத்தால் சனிக்கிழமை இரவு மேற்படி ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

ஆர்ப்பாட்டத்தில் மின் பாவனையாளர்களின் உரிமைக்கு என்ன நடக்கின்றது, அதிகரிக்கவிருக்கும் மின் கட்டண உயர்வை உடன் நிறுத்து, மின்சாரத்தை நேர்த்தியாக வழங்கு மற்றும் பல்வேறு பொருள்களுக்கான விலை உயர்வைக் கண்காணி என்ற பதாதைகளை ஏந்தி தீப்பந்தம் ஏற்றியவாறு தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியிருந்தனர்.

மேலும் ஆட்சி செய்யத் தெரியாவிட்டால் வீடு செல்லுங்கள் அல்லது வெளிநாடுகளுக்காவது நாட்டை தாரைவார்த்து நீங்கள் வீடு செல்லுங்கள் அல்லது விலை உயர்வைக் கட்டுப்படுத்துங்கள் என்று கோஷங்களை எழுப்பியவாறு தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியிருந்தனர்.

இதன்போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த மின் பாவனையாளர் சங்கத்தின் தலைவர் ஐ.எ.கசுன்ரங்கன –

நாட்டில் நிலவிவரும் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் நாளுக்கு நாள் விலைவாசிகள் அதிகரித்த வண்ணம் இருக்கும் இந்நிலையில் மின்சாரக் கட்டணத்தை மேலும் அதிகரிப்பதற்கான முன்மொழிவுகள் முன்மொழியப்பட்டுள்ள நிலையில், மின் பாவனையாளர் சங்கம் என்ற வகையில் அதை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம் எனம் இதன்போது தெரிவித்தார்.

மேலும் அரசியல்வாதிகள் மற்றும் அரச அதிகாரிகள் மின்சார கட்டணத்தை 15 வீதத்தால் அதிகரிப்பதாக அறிவித்துள்ள போதிலும் சாதாரண ஒரு கூலித் தொழிலாளியின் மின்கட்டணம் அல்லது ஒரு வர்த்தகரின் மின்கட்டணம் 300 அல்லது 600 வீதத்துக்கும் மேலாக அதிகரிக்கப்படும் நிலை இதனால் உருவாகும் எனவும், இதற்கு அப்பால் மின் கட்டணத்தை உயர்த்தும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டால் பிரதேசங்கள், கிராமங்களுக்குச் சென்று பாரிய அளவில் போராட்டங்களை முன்னெடுப்பதற்குத் தயாராக உள்ளதாகவும் இதன்போது தெரிவித்தார்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் தம்பலகாமம் பிரதேசத்தைச் சேர்ந்த பெரும்பாலான பொதுமக்கள் தீப்பந்தம் ஏந்தியவாறு நாட்டில் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் விலைவாசியைக் கண்டித்து அரசாங்கத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டத்தினை முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## குறித்த நேரத்தில் கடமைக்கு வருவதில் அரச ஊழியர்களுக்குச் சிக்கல் நிலைமை!

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி முடிவுக்கு வரும் வரை அரச ஊழியர்கள் தாமதமாக வருவதற்கு அல்லது ஏற்கனவே உள்ள கையெழுத்துக்களைப் பயன்படுத்துவதற்கு அனுமதி வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அரசாங்கங்கள், மாகாண அரசாங்கங்கள் மற்றும் அரசாங்க தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு இந்த கோரிக்கையை விடுத்துள்ளது. மின்சாரம் மற்றும் எரிபொருள் நெருக்கடிக்கு மத்தியில் ஏற்பட்டுள்ள போக்குவரத்து நெரிசல் மற்றும் போக்குவரத்தில் உள்ள சிரமங்கள் காரணமாக குறித்த நேரத்தில் கடமைக்கு வருவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

இதனால் கைரேகை இயந்திரத்தைப் பயன்படுத்தும்போது, தாமதமாக வருபவர்களுக்கு நிவாரணம் வழங்குமாறு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கின்றோம் என சங்கத்தின் பொதுச் செயலாளர் அஜித் கே.திலகரத்ன தெரிவித்துள்ளார்.

## நாட்டில் கடதாசி தட்டுப்பாடு காரணமாக மின் கட்டண பட்டியல் வழங்குவதில் தடை

நாட்டில் ஏற்பட்டுள்ள கடதாசி தட்டுப்பாடு காரணமாக மின் கட்டண பட்டியல் வழங்குவதில் தடை ஏற்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

தனது அலுவலகத்தில் குறைந்த எண்ணிக்கையிலான மின் கட்டண பட்டியல்கள் மாத்திரமே எஞ்சியுள்ளன என அதன் செய்தித் தொடர்பாளர், துணைப் பொது மேலாளர் எண்ட்ரூ நவமணி தெரிவித்துள்ளார்.

அதற்கமைய தற்போது மின் கட்டண பட்டியல் இல்லாத இடங்களில் சாதாரண கடதாசிகளில் குறிப்பிடுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரையில் அவ்வாறு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள அனைத்து அலுவலகங்களுக்கும் இலங்கை மின்சார சபையால் இந்த அறிவுறுத்தல்கள் வழங்ககப்பட்டுள்ளன எனவும் செய்தித் தொடர்பாளர் எண்ட்ரூ நவமணி, மேலும் தெரிவித்துள்ளார்.

## அதிகளவு ஹெரோயின் எடுத்துக்கொண்ட இளைஞர் யாழ் கொழும்புத்துறையில் சாவு

யாழில் ஹெரோயின் போதைப் பொருளை அதிகளவு எடுத்துக்கொண்ட இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம், கொழும்புத்துறையைச் சேர்ந்த 28 வயதுடைய இளைஞரே வீட்டில் உயிரிழந்துள்ளார் என்று விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டது.

இளைஞர், போதைப்பொருளுக்கு கடந்த 4 ஆண்டுகளாக அடிமையாக இருந்து வந்துள்ளார். அதனால் வீட்டில் பணம் கேட்பது மற்றும் திருட்டுகளிலும் ஈடுபட்டு வந்துள்ளார். அவரை மறுவாழ்வு நிலையத்துக்கு அனுப்ப பெற்றோர் முயற்சித்துள்ளனர்.

சனிக்கிழமை காலையில் ஹெரோயின் போதைப்பொருளை எடுத்துக்கொண்டு விட்டு வீட்டுக்கு வந்த இளைஞர் திடீரென நிலத்தில் சரிந்து விழுந்து உயிரிழந்துள்ளார்.

இளைஞரின் உயிரிழப்பு அதிகளவு ஹெரோயின் போதைப்பொருளை எடுத்துக்கொண்டமையால் ஏற்பட்டது என்று உடற்கூற்றுப் பரிசோதனையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போதை மாத்திரைகளை அதிகளவில் உட்கொண்ட தெல்லிப்பழை கட்டுவன் மேற்கைச் சேர்ந்த 19 வயதுடைய இளைஞர் ஒருவர் கடந்த 4 ஆம் திகதி உயிரிழந்தார். இந்த நிலையில் 2 வாரங்களில் மற்றொரு இளைஞனும் அதிகளவு ஹெரோயின் போதைப்பொருளை எடுத்துக்கொண்டமையால் உயிரிழந்துள்ளார்.

போதைப்பொருள் பாவனைக்கு எதிரான விழிப்புணர்வு நடவடிக்கைகள் மற்றும் விற்பனையைக் கட்டுப்படுத்தாவிடின் இளவயதினரின் உயிரிழப்புகள் அதிகரிக்கும் என்று மருத்துவர்களும், சமூக ஆர்வலர்களும் தெரிவிக்கின்றனர்.

கிராம மட்ட அமைப்புக்கள் பொலிஸாருடன் இணைந்து போதைப்பொருள் விற்பனை செய்வோர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## சர்வதேச தொலைபேசி அழைப்பு கட்டணங்களும் அதிகரிக்கப்பட்டன

சர்வதேச தொலைபேசி அழைப்பு கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன. தொலைபேசி நிறுவனங்கள் இது தொடர்பாக அமைச்சு தெரியப்படுத்தியுள்ளதாக தொழில்நுட்ப அமைச்சு தெரிவித்துள்ளது.

அமெரிக்க டொலருக்கு நிகராக இலங்கை ரூபா 30 வீதம் வரை மதிப்பிழந்துள்ளதன் காரணமாக சர்வதேச தொலைபேசி அழைப்பு கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன. எனினும் தேசிய தொலைபேசி அழைப்பு கட்டணங்கள் மற்றும் இணையத்தள கட்டணங்களை அதிகரிக்க இது வரை அனுமதி வழங்கவில்லை எனவும் தொழில்நுட்ப அமைச்சு கூறியுள்ளது.



## பல ஆயிரம் லீற்றர் கோடா, கசிப்பு மற்றும் ஸ்பிரிட் ஒரு மாத காலப்பகுதியில் இராணுவத்தால் அழிப்பு!

கிளிநொச்சியில் ஒரு மாத காலப்பகுதியில் பத்தாயிரம் லீற்றர் கோடா, 100 லீற்றர் கசிப்பு ஸ்பிரிட் இராணுவத்தால் அழிக்கப்பட்டுள்ளதாக இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி – கட்டைக்காடு குளப் பகுதியில் இராணுவ புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலிற்கு அமைவாக சனிக்கிழமை இவை அழிக்கப்பட்டுள்ளன.

கசிப்பு உற்பத்திக்குத் தயாராக இருந்த 20 பரல்கள் இவ்வாறு அழிக்கப்பட்டுள்ளமையுடன், ஒரு மாத காலப் பகுதிக்குள் குறித்த பகுதியில் பத்தாயிரம் லீற்றர் கோடா, 100 லீற்றர் கசிப்பு மற்றும் ஸ்பிரிட் என்பன அழிக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் 100 பரல்களும் வடிப்பதற்குப் பயன்படும் உபகரணங்களும் மீட்கப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள பசுமை ஊடக இல்லம் (தனி) வரை. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 21.03.2022 இல் வெளியிடப்பெற்றது.

காலைக்கதிர் Kalaikkathir

# பிரபாகரனும் சிறி சபாரத்தினமும் என்ன முடிவை எடுத்திருப்பார்களோ அதை நாம் எடுத்துள்ளோம்!

## பேச்சுக்குப் போகாமைக்கு இப்படி நியாயம் கூறுகின்றது ரெலோ



**சர்வதேச அழுத்தங்களில் இருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்ள எம்மைப் பகடைக்காயாக ஆக்குகின்ற செயற்பாடே ஜனாதிபதியின் பேச்சுவார்த்தைக்கான அழைப்பு என ரெலோ தலைவர்,நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.**

**நேற்றைய தினம் மட்டக்களப்பிலுள்ள ரெலோ அலுவலகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் இதனை அவர் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நேற்றைய தினம் (வெள்ளியன்று) எமது கட்சியின் தலைமைக்குழு மட்டக்களப்பில் கூடி சில தீர்மானங்களை எடுத்திருந்தது.

ஜனாதிபதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினை அழைத்ததையொட்டி ஏற்கனவே நாங்கள் சம்பந்தன் ஐயாவிற்கு ஒரு கடிதத்தை அனுப்பியிருந்தோம். அது தொடர்பில் சில தீர்மானங்களை எடுத்திருந்தோம்.

எமது தீர்மானத்தின் போது நாங்கள் இரண்டு தலைவர்களைச் சிந்தித்தோம். ஒன்று எங்கள் கட்சியின் தலைவர் ஸ்ரீசபாரெத்தினம். மற்றையது விடுதலைப்புலிகளின்தலைவர்வே.பிரபாகரன் ஆகியோரின் சிந்தனை இந்த நேரத்தில் எவ்வாறு இருந்திருக்கும் என்று நாங்கள் சிந்தித்துப் பார்த்தோம்.

அந்த அடிப்படையிலே அவர்கள் இருந்திருந்தால் நிச்சயமாக இந்தப் பேச்சுவார்த்தைக்கு நிபந்தனை விதித்திருப்பார்கள். அந்த நிபந்தனை என்பது நல்லிணக்க அடிப்படையிலே சில விடயங்களை ஜனாதிபதி செய்ய வேண்டும் என்று நாங்கள் சுட்டிக் காட்டியிருக்கின்றோம்.

ஜனாதிபதி இன்றுவரைக்கும் போரை நடத்திமுடித்தவர்என்றபெருமிதத்தோடும் இறுமாப்போடும் சிங்கள மக்களின் வாக்குகளால் வந்தவர். அந்த இனத்துவேசத்தோடும், இனப்பிரச்சினை என ஒன்று இந்த நாட்டிலே இல்லை, பெருளாதாரப் பிரச்சனை மாத்திரம்தான் இருக்கின்றது என்று சொல்லிக் கொண்டு இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினை பேச்சுக்கு அழைக்கின்றார்.

சம்பந்தன் ஐயா அவர்கள் முதலில் ஜனாதிபதிக்குக் கடிதம் ஒன்றை அனுப்பிக் கலந்துரையாட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து ஒன்பது மாதங்கள் கழித்து, தற்போது நாடு படுமோசமான பின்னடைவைச் சந்தித்திருக்கின்றது. இந்த சூழலிலே, வடக்கு, கிழக்கிலே இந்த அரசாங்கம் காணிகளைச் சூறையாடுகின்றது, புத்தர் சிலைகளை வைக்கின்றது, காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு விலைபேசுகின்றது, களவு,பாலியல் வன்புணர்வு செய்தவர்களை பொதுமன்னிப்பு என்ற ரீதியில் விடுதலை செய்கின்ற இந்த அரசு 20 வருடங்களுக்கு மேலாக சிறையிலே வாடுகின்ற அரசியற் கைதிகள் சம்பந்தமாக எந்தவொரு அக்கறையும் கொள்ளாத சூழலிலே, பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை நீக்க வேண்டும் என்று ஐ.நா. தீர்மானம் சொல்லுகின்ற இந்த சூழலிலே, ஐ.நாவின் நெருக்கடி, அதில் அங்கம் வகிக்கும் நாடுகளின் நெருக்கடி போன்றவனவற்றிற்குள் இருந்துகொண்டிருக்கும் இந்தச் சூழலிலே, அது மாத்திரமல்லாமல் இந்தப் பேச்சுவார்த்தைக்கு நடுவில் செயற்படும் வெளிவிகார அமைச்சரின் செயலாளர் கூடச் சொல்லுகின்றார் இந்த நாட்டிலே இனப்பிரச் சினை இல்லை என்று. இதற்குப் பின்னும் நாங்கள் இந்த ஜனாதிபதியுடன் பேச வேண்டுமா?

ஆகவே நாங்கள் ஒரு தீர்மானத்தை எடுத்திருக்கின்றோம். ஜனாதிபதி முதலில் இந்த நாட்டில் ஒரு இனப்பிரச்சினை இருக்கின்றது என்பதை ஒத்துக்கொள்ள வேண்டும். அதனை அவர் வெளிப்படையாகச் சொல்ல வேண்டும்.

இறுதியாக அவர் நாடாளுமன்றத்திலே உரை நிகழ்த்திய போது கூட இனப்பிரச்சினை சம்பந்தமாக தொடாத காரணத்தால் அவருடைய தேனீர் விருந்திலே நாம் கலந்து கொள்ளவில்லை.

நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவிடம் சம்பந்தன் ஐயா மிகக் காட்டாக உங்கள் சகோதரரின் பேச்சு குப்பை என்று சொல்லுகின்ற அளவிற்கு அவரின் பேச்சு நாடாளுமன்றத்திலே அமைந்திருந்தது.

இப்படியான ஒரு சந்தர்ப்பத்திலே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அழைக்கப்பட்டிருக்கின்றது. இதன்போது இறுதியாகக் கலந்து கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்கூட்டத்திலேஅங்கத்துவக் கட்சிகளாக இருக்கின்ற தமிழரசுக் கட்சியும் புளொட் கட்சியும் பேச்சுக்குச் செல்வதாகத் தெரிவித்தார்கள். நாங்கள் எங்களின் தலைமைக்குழுவில் தீர்மானித்தே எங்கள் முடிவை அறிவிப்போம் எனத் தெரிவித்திருந்தோம்.

எங்களின் தீர்மானத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகள் ஆதரிக்க வேண்டும் என்ற கோரிக்கையையும் முன்வைத்திருந்தோம். எங்களது பங்காளிக் கட்சிகள் ஜனாதிபதிடன் பேச்சுவார்த்தைக்குச் செல்வது குறித்து சற்று நிதானமாகச் சிந்திக்க வேண்டும்.

நேற்றைய தினம் கூட யாழ்ப்பாணத்தில் புத்தர் சிலை நிறுவுகின்ற செயற்பாடு நடைபெற்றது. இவ்வாறாக இந்த அரசு இக்கட்டான நிலைமையில் இருக்கின்ற சந்தர்ப்பத்திலே நாங்கள் இந்த அரசைக் காப்பாற்றுகின்ற செயற்பாட்டில் ஈடுபடக் கூடாது.

எனவே நாங்கள் எமது தலைமைத்துவக் குழுவில் தீர்மானித்துள்ளதன் பிரகாரம் இந்த நாட்டில் இனப்பிரச்சினை இருக்கின்றது என்பதை ஜனாதிபதி ஒத்துக் கொள்ள வேண்டும். காணாமல் போனவர்களுக்கு விலைபேசாமல் அவர்களை ஒப்படைத்தவர்களுக்கு நியாயமான நீதி கிடைக்கப்பட வேண்டும். உண்மை தெரியப்படுத்தப்பட வேண்டும். அதற்குப் பதிலாக காசு தருவதாகச் சொல்வது ஏற்புடையதல்ல.

எமது இருப்பைக் கேள்விக்குறியாக்கக் கூடிய விதத்தில் எமது நிலங்கள் அபகரிக்கப்படுகின்றன. நிலம் இருந்தால்தான் அந்த இனம் செறிந்து வாழ முடியும். இந்த அரசின் சிந்தனையின்படி ஒரு இனத்தின் நிலங்கைளை அபகரித்தால் அந்த இனத்தின் வாழ்வு கேள்விக்குறியாகும்.

அந்த வகையிலேயே மகாவலி, வனப் பாதுகாப்பு, பறவைகள் சரணாலயம், தொல்பொருள் திணைக்களம் என்ற திணைக்களங்கள் ஊடாக எமது பூர்வீகத்தை இல்லாதொழித்து இந்த நாட்டிலே வடக்கு கிழக்கிலே பெரும்பான்மை இனம் சார்பாக பிரதிநிதித்துவம் வர வேண்டும் என்ற திட்டத்தோடு செயற்படுகின்றார்கள்.

எமது நிலம் எமக்கு முக்கியம். இந்த நிலத்திற்காகவே பல்லாயிரக்கணக்கானவர்கள் போராட்டத்திலே மடிந்திருக்கின்றார்கள். அவர்களின் போராட்டம் மலினப்படுத்தப்பட்டுவிடக் கூடாது.

எனவே எமது நிலத்தைத் தக்க வைத்து, அடுத்த சந்ததி வாழ வேண்டும் என்று நினைத்த பொதுமக்கள், போராளிகளின் சிந்தனையை நாங்கள் சுமந்து செல்ல வேண்டும். அந்த வகையிலே இந்த நிலத்தை அபகரிக்கும் நிலைமைகளை ஜனாதிபதி உடனடியாக நிறுத்த வேண்டும். அதற்கான சமிக்ஞையைக் காட்ட வேண்டும்.

மத ரீதியாக புத்தர் சிலைகளை வைக்கின்ற முறைமையை நிறுத்த வேண்டும். தமிழ்ப் பகுதிகளில் ஆதி காலத்தில் தமிழர்கள் புத்த மதத்தைத் தழுவி இருந்தார்களே தவிர,சிங்களவர்கள் அங்கு வாழவில்லை. பௌத்த மதம் என்பது சிங்களவர்களுக்கு உரித்தான மதம் அல்ல. அது பொதுவானது.

தற்போது தொல்பொருள் ஆராய்ச்சி என்று வடக்கு கிழக்கு பிரதேசத்தில் எங்கள்மக்களின்வரலாற்றுநிலைப்பாட்டைக் கொண்டுள்ள இடங்களிலே சிங்கள ஆதிக்கத்தைச் செலுத்தி இந்த வரலாற்று இடங்களெல்லாம் சிங்கள தேசத்திற்குச் சொந்தமானது என்று சொல்கின்ற வகையிலே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இதனைஉடனடியாகநிறுத்தவேண்டும் என்றுதான் எங்கள் கோரிக்கை இருக்கின்றது.

எங்களது பிரச்சினை சம்பந்தமாக ஐ.நா சபையூடாக இந்தியாவும், சர்வதேச நாடுகளும்குரல்கொடுத்துக்கொண்டிருக்கின்ற இந்த சூழலிலே, நாங்கள் இந்த ஜனாதிபதியின் அழைப்பை ஏற்றுப் போனோமாக இருந்தால் தற்போது வெளிவிவகார அமைச்சர் சொல்வது போன்றுஐ.நா.உள்நாட்டுவிடயங்களைக் கையாளுகின்றது, அதனை ஏற்றுக் கொள்ளமுடியாது என்று சொல்வதற்கும் மேலாக, எங்களது சந்திப்பை வைத்து, நாங்கள் தமிழ்த் தரப்போடு பேசுகின்றோம், எனவே எங்கள் பிரச்சினைகளை நாங்கள் அவர்களோடு பேசித் தீர்ப்போம் என்று தங்களைக் காப்பாற்றுவதற்கு எங்களை ஒரு பகடைக்காயாக ஆக்குகின்ற ஒரு நிலைப்பாட்டினை இந்த அரசாங்கமும், ஜனாதிபதியும் வெளிப்படையாகச் சொல்லப் போகின்றார்கள்.

எனவே எங்களுக்காகக் குரல் கொடுக்கின்ற நாடுகளினுடைய ஒட்டுமொத்தமான அழுத்தத்தைக் குறைப்பதற்காக தொடர்ந்து நாங்கள் பேசத் தயாராக இருக்கின்றோம் என்ற வாய்ப்பினை ஜனாதிபதி பெறப்போகின்றார். அவர் இனப்பிரச்சினை தொடர்பில் பேசப் போகின்றாரா? அல்லது பொருளாதார ரீதியில் பேசப்போகின்றாரா? எதை வைத்துக் கொண்டு அவர் பேச்சுக்கு அழைக்கின்றார் என்ற விடயம் அரச தலைவரின் செயலக நிகழ்ச்சி நிரலில் கூடச் சொல்லப்படவில்லை.

இவர் அரசியற் தீர்வுக்காகத்தான் அழைக்கின்றார் என்று நாங்கள் ஒரு கற்பனையிலே இருக்கின்றோம். இன்று மூன்றில் இரண்டு பெரும்பான்மை கூட இல்லாமல் இந்த அரசாங்கம் இருக்கின்றது. அரசியல் சாசன திருத்தம் அரசாங்கத்திற்கும், சிங்கள மக்களுக்கும் சாதகமாக எழுதப்பட்டாலும் கூட நாடாளுமன்றத்திலே மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றால்தான் அதனை வெல்ல வைக்க முடியும்.

ஆனால் தற்போது இந்த அரசாங்கத்திற்கு அவ்வாறான நிலைமை இல்லை. அவர்கள் சார்ந்த விடயத்தைக் கொண்டு வந்தால் கூட வெல்ல முடியாத நிலையிலே இருக்கும் போது அரசியல் திருத்தத்தில் இனப்பிரச்சினையைக் கொண்டு வருகின்ற வாய்ப்பு எவ்வாறு உருவாகும் என்ற கேள்வியை நாங்கள் முன் வைக்க விரும்புகின்றோம்.

தமிழீழ விடுதலை இயக்கம் நாங்கள் வைத்த தீர்மானங்களுக்கு ஜனாதிபதியினால் நல்ல சமிக்ஞை காட்டுகின்றபோதே பேச்சுவார்த்தைக்குச் செல்ல வேண்டும் என்பதே எமது கோரிக்கை. பேச்சுவார்தைக்குச் செல்லக் கூடாது என்று நாங்கள் ஒருபோதும் சொல்லவில்லை. இந்தச் சூழலிலே நாங்கள் சில விடயங்களைச் சாதிக்க வேண்டும்.

எமது மக்களின் பிரச்சனைகளில் முக்கிய ஓரிரு விடயங்களையாவது கோரிக்கையாக முன்வைத்துப் பெறவேண்டும் என்பதுதான் எங்கள் நோக்கம். பேச்சுவார்த்தைக்குப் போகவேண்டாம் என்று நாங்கள் சொல்லவில்லை.

எனவே எமது கட்சி தீர்க்கமான முடிவெடுத்திருக்கின்றது. ஜனாதிபதியின் சமிக்ஞை கிடைக்காதவரையில் நாங்கள் பேச்சுவார்த்தையில் கலந்துகொள்ள முடியாமல் இருக்கின்றது. - என்றார்.